சுபீட்சம்
SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
18 புதன்கிழமை நவம்பர் 2026 | 18 Wednesday November 2026
Switzerland Edition

Danalakshmi
GROSSISTE DES GOÛTS DU MONDE
உலக உணவுப் பொருட்களின் மொத்த விற்பனையாளர்
01 84 74 96 80 | danalakshmi.fr | 15 Impasse Bloch Prager 93120 La Courneuve, France
மொத்த விற்பனை மட்டும்

MULTI CONSULTING
Versicherung & Finanz

வீடுகள் விற்பனைக்கு

8424 Embrach (ZH)

Baubeginn Februar 2027



Wohnung



4 x 5.5 Zimmer

Wohnung



4 x 3.5 Zimmer

Wohnung



4 x 2.5 Zimmer

079 765 50 57

8180 Bülach

SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



18 புதன்கிழமை நவம்பர் 2026 | 18 Wednesday November 2026

Switzerland Edition



ALDI கோழி இறைச்சியில் லிஸ்டீரியா: மூன்று வகைத் தயாரிப்புகள் மீளப்பெறல்



சுவிட்சர்லாந்தில் ALDI SUISSE விற்பனை நிலையங்களில் விற்கப்பட்ட கோழி நெஞ்சிறைச்சித் துண்டுகளில் லிஸ்டீரியா பக்டீரியா கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, மூன்று வகைத் தயாரிப்புகள் மீளப்பெறப்படுகின்றன.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

சூரிச் நகரில் மணிக்கு 23.90 பிராங்குகள் குறைந்தபட்ச ஊதியம்

2027இல் சட்டம் அமுல் — நடைமுறைப்படுத்த ஆண்டு இறுதிவரை அவகாசம்!

சூரிச் நகரின் குறைந்தபட்ச ஊதிய ஒழுங்குவிதி 2027 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. எனினும், தேவையான மாற்றங்களைச் செய்து நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனங்களுக்கு 2027

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE



செல்வந்த நாடான சுவிஸிலும் பண நெருக்கடி: 38% ஊழியர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் நிதிப் பிரச்சினைகள்!

சுவிட்சர்லாந்தில் பணிபுரிபவர்களிடையே நிதிக் கவலைகள் அதிகரித்துள்ளதாக WTW ஆலோசனை நிறுவனத்தின் புதிய ஆய்வு

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

சுவிஸில் வருமானம் அதே நிலையில்; வீட்டுச் செலவு அதிகரிப்பு; குடும்ப வரவுசெலவில் தொடரும் சுமை!

சுவிட்சர்லாந்தில் குடும்பங்களின் வருமானம் பெரிதாக உயராத நிலையில், வீட்டுவசதி மற்றும் எரிசக்திச் செலவுகள் அதிகரித்துள்ளன. இதனால் அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பதில் குடும்பங்களுக்கான

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

சுவீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

Danalakshmi
GROSSISTE DES GOÛTS DU MONDE
உலக உணவுப் பொருட்களின் மொத்த விற்பனையாளர்
01 84 74 96 80 | danalakshmi.fr | 15 Impasse Bloch Prager 93120 La Courneuve, France
மொத்த விற்பனை மட்டும்

11 புதன்கிழமை நவம்பர் 2026 | 11 Wednesday November 2026

Switzerland Edition

Baubeginn Januar 2027
MULTI CONSULTING
Versicherung & Finanz
8424
Embrach (ZH)
வீடுகள்
விற்பனைக்கு
Wohnung
4 x 5.5 Zimmer
Wohnung
4 x 3.5 Zimmer
Wohnung
4 x 2.5 Zimmer
079 765 50 57
8180 Bülach

IMPORTAS
International Foods & Beverages
உலகின் சுவைகள் உங்களுக்கு அருகில்
CASH & CARRY • GROSSHANDEL
ZÜRICH RETAIL SHOP
Importas Cash & Carry
Baslerstrasse 102, 8048 Zürich
(80 m vom Letzipark)
TEL +41 43 343 03 55
FAX +41 43 343 03 56
EMAIL info@importas.ch
OPENING HOURS
Mon-Fri 10:00-20:00
Sat 09:00-18:00
BERN RETAIL SHOP
Importas Cash & Carry
Kranichweg 8, 3074 Muri bei Bern
TEL +41 31 951 24 44
EMAIL bern@importas.ch
OPENING HOURS
Mon-Fri 09:00-19:00
Sat 08:00-18:00
www.importas.ch

ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tivolistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch

DEPANNAGE URGENCE
7/24
022 782 08 88
LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier

KAMAL KREDIT
HYPOTHEK & IMMOBILIEN
வங்கிக்கடன்
வீட்டுக்கடன் (Hypothek)
ஆயுள் காப்புறுதி
இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
043 333 5971
079 650 2615
swissenthu@hotmail.com | info@kamalkredit.ch | Zuercherstrasse 47b, 8426 Lufingen | www.kamalkredit.ch

AERO COURIER
உங்கள் உறவுகள்...
எங்களால் இணைகிறது...
100% SATISFACTION GUARANTEE
சுவிட்சர்லாந்திலிருந்து இலங்கைக்கு விமானம் மூடாக குறைந்த விலையில் உங்கள் பொதிகளை 10 நாட்களுக்குள் உங்கள் உறவினர்களின் கைகளில் கிடைக்கப்பெற இன்றே நாடுங்கள்!
ஒரு கிலோவிற்கு
7.00 CHF
மட்டுமே!
BEST PRICE
Neugasse 60, 8005 Zürich | 079 591 16 66 | 076 384 15 80 | www.aerocourier.com

SPITEX
XUNDHEIT PLUS
தமிழ் மொழியில்
பராமரிப்பு சேவைகள்
அன்பான கவனிப்பு
நம்பகமான சேவை
உங்கள் தாய்மொழியில்
044 202 05 25
079 904 25 25
www.spitexxundheitplus.ch

VTS Finance GmbH
IMMOBILIEN
HYPOTHEKEN & FINANZIERUNGEN
VERSICHERUNGEN
KREDITE
2027
மருத்துவக் காப்பீடு
மாற்றத் தயாரா?
இப்போதே தொடர்புகொள்ளுங்கள்!
078 920 58 58
info@vtsfinance.ch
Immobilien • Hypotheken • Versicherungen • Kredite

SKY AUTO AG
SKY Auto AG
Libellenweg 21
3006 Bern
Hotline: 031 930 70 80

ELLAALAN
SWITZERLAND
Importer | Distributor | Wholesaler
Felsweg 1
5727 Oberkulm AG
Switzerland
info@ellaalan.ch
www.ellaalan.ch
+41 41 870 88 44
+41 79 888 88 44

SRI JEWELLERY
Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
079 898 51 01
info@srijewellery.ch

AADAA FINANCE
GmbH
aaDaa Finance 0798000100
உங்கள் எதிர்காலத்திற்கு
சரியான நிதித் திட்டமிடல்!
தனிநபர் கடன்
Privatkredit
CHF 3'000 – 250'000
ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்
மருத்துவக் காப்பீடு
Krankenkasse
அடிப்படை மற்றும் கூடுதல் காப்பீடு
பிரீமியம் ஒப்பீடு • ஆலோசனை
ஆயுள் காப்பீடு
Lebensversicherung
Säule 3a • 3b • Risiko
குடும்பப் பாதுகாப்பு • ஓய்வுக்காலத் திட்டம்
தனிப்பட்ட ஆலோசனை • Switzerland முழுவதும் சேவை
079 800 01 00
ஆலோசனைக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
www.aadaafinance.ch

தமிழின் குரலாய்
அக்கினி fm
அக்கினி வானொலியை கேட்க...
CLICK HERE

SPITEX
XUNDHEIT PLUS

ANGEHÖRIGENPFLEGE

உறவினர் பராமரிப்பு

தமிழ் மொழியில்
பராமரிப்பு
சேவைகள்

- அன்பான கவனிப்பு
- நம்பகமான சேவை
- உங்கள் தாய்மொழியில்



வீட்டிலேயே
அன்புடன் பராமரிப்பு

ஒரு மணித்தியாலத்திற்கு ஊதியம்
உங்கள் குடும்பத்தினரை வீட்டிலேயே கவனித்து,
நியாயமான ஊதியம் பெறுங்கள்.

CHF 35.- முதல்

Pflegehelfer/in Ausbildung

இலவசம்

உங்களிற்கான நன்மைகள்

உங்கள் பழக்கப்பட்ட
வீட்டிலேயே பராமரிப்பு

முறையான மற்றும்
நியாயமான ஊதியம்

தொழில்சார்
மேற்பார்வையும் தனிப்பட்ட
வழிகாட்டலும்



சேவை வழங்கப்படும் பகுதிகள்

Aargau | Basel-Landschaft | Basel-Stadt | Bern | Freiburg | Glarus | Graubünden | Luzern | Schwyz | Solothurn | St. Gallen | Uri | Zürich

அனைத்து சுவிஸ் மருத்துவக் காப்பீடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்டது

மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

ZÜRICH
Birmensdorforstrasse 360 - 8055 Zürich
044 202 05 25 - 079 904 25 25

UZNACH
Zürcherstrasse 25 - 8730 Uznach
055 290 25 25 - 079 901 25 25

info@spitexxundheitplus.ch

www.spitexxundheitplus.ch

ALDI கோழி இறைச்சியில் லிஸ்டீரியா: மூன்று வகைத் தயாரிப்புகள் மீளப்பெறல்



பாதிக்கப்பட்ட தயாரிப்புகளைச் சாப்பிட வேண்டாம் என மத்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் கால்நடை மருத்துவ அலுவலகமான BLV பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ALDI SUISSE அவற்றை உடனடியாக விற்பனையிலிருந்து அகற்றி, மீளப்பெறும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இந்த எச்சரிக்கை, 150 கிராம் பொதிகளில் விற்கப்பட்ட Mini-Hähnchenbrust-Filetstücke தயாரிப்பின் Mini-Classic, Mini-Curry மற்றும் Mini-Paprika ஆகிய மூன்று வகைகளுக்குப் பொருந்தும்.

பொதிகளில் 14.11.2026, 17.11.2026, 20.11.2026, 24.11.2026 அல்லது 30.11.2026 எனக் குறைந்தபட்சத் தரக்காப்புத் திகதி குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவை நாடு முழுவதுமுள்ள அனைத்து ALDI SUISSE கிளைகளிலும் விற்கப்பட்டுள்ளதால், வாங்கியவர்கள் தங்களிடமுள்ள பொதிகளைச் சரிபார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

லிஸ்டீரியா தொற்று, நோய் எதிர்ப்புச் சக்தி நன்றாக உள்ளவர்களுக்கு லேசான அறிகுறிகளுடனோ அறிகுறிகள் இன்றியோ இருக்கலாம். எனினும், கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களுக்கு கடுமையான உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என BLV தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட தயாரிப்புகளைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே சாப்பிட்டவர்கள், உடல்நலம் குறித்து சந்தேகம் அல்லது கவலை இருந்தால் மருத்துவரை அணுகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூலம்: BLV அதிகாரப்பூர்வ அறிவிப்பு | 13.11.2026

சூரிச் நகரில் மணிக்கு 23.90 பிராங்குகள் குறைந்தபட்ச ஊதியம்

2027இல் சட்டம் அமுல் — நடைமுறைப்படுத்த ஆண்டு இறுதிவரை அவகாசம்!



டிசம்பர் 31 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனைச் சூரிச் நகர நிர்வாகம் நவம்பர் 12ஆம் திகதி அறிவித்துள்ளது.

இந்த ஒழுங்குவிதியின்படி, பெரும்பாலான பணிநேரத்தைச் சூரிச் நகர எல்லைக்குள் மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு, மணித்தியாலத்திற்கு குறைந்தது 23.90 பிராங்குகள் மொத்த ஊதியம் (Brutto) வழங்கப்பட வேண்டும். இது சமூகக் காப்புறுதி உள்ளிட்ட பிடித்தங்களுக்கு முந்தைய தொகையாகும். பயிற்சியாளர்கள் உள்ளிட்ட சில பிரிவினருக்கு விதிவிலக்குகள் உள்ளன.

2027 ஜனவரியிலேயே அனைவருக்கும் ஊதியம் உயருமா?

ஒழுங்குவிதி ஜனவரியில் அமுலுக்கு வந்தாலும், நிறுவனங்களுக்கு ஆண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தும் அவகாசம் உள்ளது. எனவே, ஜனவரி முதலாம் திகதியிலிருந்தே தகுதியுள்ள அனைவருக்கும் புதிய ஊதியம் கிடைக்கும் என்று கருத முடியாது. இதற்கான விரிவான நடைமுறை விதிகள், சமூகப் பங்காளிகளின் பங்களிப்புடன் 2027ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்குள் வெளியிடப்படவுள்ளன.

இந்தக் கால அவகாசத்தைச் சூரிச் கன்டோன் தொழிற்சங்கச் சம்மேளனம் விமர்சித்துள்ளது. நடைமுறையில் குறைந்தபட்ச ஊதியம் 2028இல்தான் கிடைக்கும் நிலை ஏற்படக்கூடும் என்றும், குறைந்த ஊதியம் பெறும் சுமார் 17,000 பணியாளர்கள் மேலும் காத்திருக்க வேண்டியிருக்கும் என்றும் அது தெரிவித்துள்ளது.

நிதிச் சிரமமுள்ள நிறுவனங்களுக்கு விசேட அவகாசம்

நிதிச் சிரமங்களை நிரூபிக்கும் நிறுவனங்கள், காரணங்களுடன் விண்ணப்பித்தால் இரண்டு ஆண்டுகள் கொண்ட விசேட இடைக்கால அவகாசத்தை நகர நிர்வாகம் வழங்கலாம். இந்தக் காலம், நடைமுறை விதிகள் வெளியிடப்படும் நாளிலிருந்து கணக்கிடப்படும்.

2023 ஜூன் வாக்கெடுப்பில் சுமார் 70 சதவீத ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்திட்டம், சட்டச் சவால்களால் தாமதமடைந்தது. 2026 மே மாதத்தில் மத்திய உச்சநீதிமன்றம் இதன் சட்டபூர்வத்தன்மையை உறுதிப்படுத்தியது. தற்போது அமுலாக்க முடிவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டாலும், அதனால் நடைமுறை தானாக இடைநிறுத்தப்படாது என நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

AERO COURIER

உங்கள் உறவுகள்...
எங்களால் இணைகிறது...

ஒரு கிலோவிற்கு
7.00 CHF
மட்டுமே!

சுவிட்சர்லாந்திலிருந்து
இலங்கைக்கு விமானம்
ஊடாக குறைந்த
விலையில்
உங்கள் பொதிகளை
10 நாட்களுக்குள்
உங்கள் உறவினர்களின்
கைகளில் கிடைக்கப்பேற
இன்றே நாடுங்கள்!



SATISFACTION 100% GUARANTEE

Neugasse 60, 8005 Zürich
079 591 16 66 | 076 384 15 80
www.aerocourier.com

செல்வந்த நாடான சுவிஸிலும் பண நெருக்கடி: 38% ஊழியர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் நிதிப் பிரச்சினைகள்!



தெரிவிக்கிறது. ஆய்வில் பங்கேற்றவர்களில் 38 சதவீதமானோர், பணப் பிரச்சினைகள் தங்களது வாழ்க்கையை எதிர்மறையாகப் பாதிப்பதாகக் கூறியுள்ளனர். 2024ஆம் ஆண்டில் இந்த விகிதம் 25 சதவீதமாக இருந்தது.

2026 பெப்ரவரி முதல் மே வரையான காலப்பகுதியில், சுவிட்சர்லாந்தில் பணிபுரியும் சுமார் ஆயிரம் பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த முடிவுகள் ஊழியர்களைப் பற்றியவை; நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் குறிக்கும் புள்ளிவிவரங்கள் அல்ல.

எதிர்கால ஓய்வூதிய வாழ்க்கை குறித்தும் கவலை நிலவுகிறது. 49 சதவீதமானோர், தமது பெற்றோரின் தலைமுறையுடன் ஒப்பிடும்போது ஓய்வுக்காலத்தில் தங்களது நிதிநிலை மோசமாக இருக்கும் என எதிர்பார்க்கின்றனர்.

சம்பள உயர்வும் குறைந்த அளவிலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 400 சுவிஸ் நிறுவனங்களிடம் UBS நடத்திய ஆய்வின்படி, 2027ஆம் ஆண்டுக்கான சராசரி சம்பள உயர்வு ஒரு சதவீதமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

UBS எதிர்பார்க்கும் பணவீக்கத்தைக் கழித்தால், உண்மையான வாங்கும் திறன் அதிகரிப்பு சுமார் 0.2 சதவீதமாகவே இருக்கும். சில்லறை விற்பனைத்துறையில் 0.8 சதவீதமும், கைக்கடிகாரம் மற்றும் நகைத்துறையில் 0.7 சதவீதமும் சம்பள உயர்வு எதிர்பா ர்க்கப்படுகிறது.

சுவிஸில் வருமானம் அதே நிலையில்; வீட்டுச் செலவு அதிகரிப்பு; குடும்ப வரவுசெலவில் தொடரும் சுமை!

நிதிச்சுமை தொடர்வதை மத்திய புள்ளிவிவர அலுவலகத்தின் 2024ஆம் ஆண்டுக்கான குடும்ப வரவுசெலவுக் கணக்கெடுப்பு காட்டுகிறது.

2026 நவம்பர் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின்படி, வரி, சமூகக் காப்புறுதிப் பங்களிப்புகள் மற்றும் கட்டாய மருத்துவக் காப்புறுதி உள்ளிட்ட செலவுகளைக் கழித்த பின்னர், ஒரு குடும்பத்திற்குக் கிடைத்த மாத வருமானம் சராசரியாக 7,209 பிராங்குகள். முந்தைய ஆண்டில் இது 7,186 பிராங்குகளாக இருந்தது.

ஆனால், வீட்டுவசதி மற்றும் எரிசக்திக்கான மாதச் செலவு 1,449 பிராங்குகளிலிருந்து 1,546 பிராங்குகளாக உயர்ந்துள்ளது. அதாவது, மாதத்திற்கு மேலும் 97 பிராங்குகள் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நுகர்வுச் செலவுகளில் வீட்டுவசதியே மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.

குடும்பங்கள் மாதந்தோறும் சராசரியாக 3,240 பிராங்குகளை கட்டாயச் செலவுகளுக்கும், 5,244 பிராங்குகளை உணவு, வீட்டுவசதி, போக்குவரத்து உள்ளிட்ட நுகர்வுச் செலவுகளுக்கும் பயன்படுத்தியுள்ளன.

அனைத்துச் செலவுகளுக்கும் பின்னர் மாதம் சராசரியாக 1,578 பிராங்குகள் சேமிப்புக்கு எஞ்சியிருந்தாலும், எல்லாக் குடும்பங்களாலும் சேமிக்க முடிவதில்லை. மாத மொத்த வருமானம் 4,993 பிராங்குகளுக்குக் குறைவாக உள்ள குடும்பங்கள், பல சந்தர்ப்பங்களில் வருமானத்தைவிட அதிகமாகச் செலவிட்டுள்ளன. இந்தப் பிரிவில் ஓய்வூதியக் குடும்பங்கள் அதிகம் இருப்பதால், சிலர் தமது சேமிப்பைப் பயன்படுத்தி வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்கின்றனர்.

7,209 பிராங்குகள் என்பது ஒருவரின் சம்பளமல்ல; குடும்ப உறுப்பினர்கள் அனைவரது வருமானத்தையும் உள்ளடக்கிய சராசரியாகும். மேலும், சுவிஸிலுள்ள 61 சதவீதக் குடும்பங்களின் செலவிடக்கூடிய வருமானம் இந்தச் சராசரிக்குக் கீழேயே உள்ளது.

வருமானம் நிலையாக இருந்தாலும், வீட்டுச் செலவின் உயர்வு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்துவதை இந்தப் புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆதாரம்: சுவிஸ் மத்திய புள்ளிவிவர அலுவலகம் – BFS, குடும்ப வரவுசெலவுக் கணக்கெடுப்பு 2024.



MULLTI CONSULTING
Versicherung & Finanz

IHR PARTNER FÜR

IMMOBILIEN
VERSICHERUNG
FINANZ

SICHER. PERSÖNLICH. FÜR IHRE ZUKUNFT.



வீடு வாங்க விற்க

வங்கிக்கடன்

காப்புறுதிகள்

வருமான வரிப்படிவம் நிரப்புதல்

சமூக அக்கறை
எமது இலக்கு!

- உங்கள் வீட்டையும்,
- உங்கள் குடும்பத்தையும்,
- உங்கள் எதிர்காலத்தையும் பாதுகாப்போம்.

079 765 50 57
Jetzt kontaktieren

Im Rietpark 5
8180 Bülach ZH

srasan@hotmail.com
info@multiconsulting.ch

Besuchen Sie unsere Website.
www.multiconsulting.ch

SKY AUTO AG

சுவிற்சர்லாந்தில் உங்களுக்கு பிடித்த வாகனம் எந்த Brandல் எங்கிருந்தாலும் உடனே ஒழுங்கு செய்து உங்கள் கைகளுக்கே கொண்டுவந்து தரும் முதல் தமிழர் நிறுவனம்





Express Credit அல்லது Leasing சேவை

குறைந்த வட்டி வீதம் மற்றும் காப்புறுதியோடு
உங்கள் வாகனம் உங்கள் கைகளில்

தொடர்புக்கு 031 930 70 80 | Libellenweg 21 3006 Bern | www.sky-auto.ch

ELLAALAN
SWITZERLAND

இறக்குமதியாளர், விநியோகஸ்தர், மொத்தவிற்பனையாளர்



Zürich சில்லறை விற்பனை நிலையம்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

Moteren Strasse 9
8005 Zürich

044 543 48 84

மொத்த விற்பனை

Felsweg 1
5727 Oberkulm AG, Switzerland

+41 41 870 88 44

+41 79 888 88 44

info@ellaalan.ch

www.ellaalan.ch

Sj

சிறி ஜுவல்லரி

உங்கள் ரசனைக்கேற்ப புதிய
தங்க நகைகளை வாங்கவும்
புதிய டிசைன்களில் ஆபரணங்களை
செய்து கொள்ளவும், பழைய
தங்கங்களை உருக்கி, புதிய
தங்க நகைகள் செய்து கொள்ளவும்,
விரைவாக திருத்த வேலைகளும்
செய்தும் தரப்படும்.

**நகைத்தொழிலில் நீண்ட
காலம் அனுபவம் பெற்ற
நாங்கள் தாலிக்கு பொன்
உருக்கி வைரதாலிக்கொடி
செய்து தருகிறோம்.**

வைர தாலி கொடி. மோதிரம்,
வளையல், பெயர் பெண்டன்
மற்றும் அனைத்து நகைகளும்
செய்து தரப்படும்.




Sj SRI JEWELLERY

Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01

சுவிஸில் புகலிடக் கோரிக்கைகள் 16% குறைவு:

ஒக்டோபரில் 2,210 விண்ணப்பங்கள் பதிவு!



சுவிட்சர்லாந்தில் 2026 ஒக்டோபரில் 2,210 புகலிடக் கோரிக்கைகள் பதிவாகியுள்ளதாக இடம்பெயர்வுக்கான அரசுச் செயலகம் (SEM) தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே மாதத்தைவிட 433 கோரிக்கைகள் குறைவு – அதாவது 16% வீழ்ச்சியாகும்.

அதிக கோரிக்கைகள் பதிவான நாட்டவர்களில் ஆப்கானிஸ்தான் 498, எரித்திரியா 430, அல்ஜீரியா 236, எத்தியோப்பியா 171, சோமாலியா 163 என்ற எண்ணிக்கையில் உள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோரிக்கைகள் குறைந்திருந்தாலும், 2026 செப்டம்பரைவிட ஒக்டோபரில் 4% அதிகரித்துள்ளன. பொதுவாக கோடைக்கால இறுதியிலும் இலையுதிர்காலத்திலும் கோரிக்கைகள் அதிகரித்து, குளிர்காலத்தில் குறைவதாக SEM விளக்குகிறது.


ஒக்டோபரில் 2,419 புகலிடக் கோரிக்கைகள் தொடர்பில் முதற்கட்டத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதில் 567 பேருக்குப் புகலிடம் வழங்கப்பட்டது.

மேலும், அதிகாரிகளின் கண்காணிப்பில் 732 பேர் சுவிஸிலிருந்து வெளியேறியுள்ளனர். இவர்களில் 418 பேர் சுயமாக வெளியேறிய நிலையில், ஏனைய 314 பேர் காவல்துறைப் பாதுகாப்புடன் சொந்த நாடுகள் அல்லது பொறுப்பான மூன்றாம் நாடுகள் மற்றும் Dublin நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



ROMANDA IMMO BUCHHALTUNG GMBH

உங்கள் கணக்குகள் –
எங்கள் பொறுப்பு!



சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான
நம்பகமான மற்றும் தொழில்முறை
கணக்கியல் சேவைகள்.

- கணக்குப் பதிவு – Buchhaltung
- வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
- MWST / VAT கணக்கீடு
- சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
- Quellensteuer
- நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
- வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்

துல்லியம் • நம்பிக்கை • தனிப்பட்ட சேவை

உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில்
நம்பிக்கையான துணையாக...

ROMANDA IMMO BUCHHALTUNG GMBH

Tivolistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch



STRAVEL
Your Journey Our Care

Year End Sale
இலங்கைக்கு..

620 CHF
40 Kilo

Sri Lanka
Always a good idea ♡

Home is closer than you think ♡

Travel Brings Us Closer ♡

அழையுங்கள்
044 419 91 00 | 079 913 77 59

Luisenstrasse 41, 8005 Zurich | www.stravel.ch | info@stravel.ch

உலகின் மிக விலையுயர்ந்த Metro ticket Lausanne-லா?

புதிய ranking-ல் Swiss நகரம் முதலிடம்



புதிய உலகளாவிய ranking ஒன்றில், சுவிட்சர்லாந்தின் Lausanne metro உலகில் single ticket விலை அதிகமான metro system ஆக குறிப்பிடப்பட்டுள்ளது.

Remitly வெளியிட்ட Global Metro Affordability Index படி, ஆய்வு செய்யப்பட்ட 94 நகரங்களில் Lausanne metro single journey ticket விலை CHF 5.85 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது சுமார் €6.36 அல்லது $7.22 ஆகும். இந்த தரவரிசையில் Lausanne-க்கு அடுத்ததாக Copenhagen Metro, பின்னர் London Underground இடம்பெற்றுள்ளன.

ஆனால் இந்த headline-ஐ வாசிக்கும் போது ஒரு முக்கிய விஷயத்தை கவனிக்க வேண்டும். Lausanne பகுதியில் public transport விலை Mobilis zone system அடிப்படையில் மாறுபடும். அதாவது நீங்கள் எத்தனை zones பயணம் செய்கிறீர்கள், full fare ஆ அல்லது reduced fare ஆ, Half-Fare Card இருக்கிறதா என்பதன் அடிப்படையில் ticket விலை மாறும்.

Mobilis தகவலின்படி, tickets குறிப்பிட்ட zones மற்றும் validity period அடிப்படையில் வழங்கப்படுகின்றன. Half-Fare travelcard வைத்திருப்பவர்கள் Mobilis network-ல் tickets மற்றும் day cards-க்கு up to 50% discount பெறலாம்.

Lausanne-ன் m2 metro உலகின் steepest driverless metro lines-ல் ஒன்றாகவும் அறியப்படுகிறது. நகரத்தின் உயர்வு-தாழ்வு நில அமைப்பு காரணமாக, இந்த metro Lausanne-ல் மிக முக்கியமான public transport இணைப்பாக உள்ளது.

Remitly ranking-ல் ticket விலை மட்டும் பார்த்தால் Lausanne முதலிடம் பிடித்தாலும், சம்பளத்துடன் ஒப்பிட்ட affordability கணக்கில் வேறு நகரங்கள் அதிக சுமையாக இருக்கின்றன. உதாரணமாக Rio de Janeiro metro-வில் ஒரு single ticket சராசரி daily wage-ன் 6.85% ஆகும் என அந்த ஆய்வு குறிப்பிடுகிறது

சுவிட்சர்லாந்தில் சேமிப்பது கடினமாகிறதா?

53% மக்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பைவிட குறைவாக சேமிக்கிறார்கள்



சுவிட்சர்லாந்தில் வாழ்க்கைச் செலவு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பலருக்கு மாதந்தோறும் பணம் சேமிப்பது கடினமாகி வருகிறது.

University of St. Gallen HSG மேற்கொண்ட புதிய ஆய்வின்படி, கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களில் 53% பேர், மூன்று ஆண்டுகளுக்கு முன்புடன் ஒப்பிடும்போது இப்போது அதே அளவு பணம் சேமிக்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு precious metals dealer Philoro நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்டது. மொத்தம் 3,057 பேர் இதில் பங்கேற்றனர்.

ஆய்வில் தெரியவந்த முக்கிய தகவல்: சுவிட்சர்லாந்தில் பெரியவர்கள் மாதந்தோறும் சேமிக்கும் median தொகை சுமார் CHF 100 முதல் CHF 250 வரை மட்டுமே உள்ளது. அதாவது மக்கள் தொகையில் பாதி பேர் இதைவிட அதிகம் சேமிக்கிறார்கள்; மற்ற பாதி பேர் இதைவிட குறைவாக சேமிக்கிறார்கள்.

மேலும், 21% பேர் மாதந்தோறும் எதையும் சேமிக்க முடியவில்லை என ஆய்வு குறிப்பிடுகிறது.

சேமிக்க முடியும் மக்களிடையே மட்டும் பார்த்தால், median savings தொகை CHF 250 முதல் CHF 500 வரை உள்ளது. HSG பேராசிரியர் Sven Reinecke கூறுவதன்படி, ஒருவர் மாதம் CHF 251 சேமிக்க முடிந்தால் கூட, அவர் சேமிப்பு அளவில் மேல்பாதியில் வருகிறார்.

சுவிட்சர்லாந்து பொதுவாக "சேமிக்கும் நாடு" என்று கருதப்பட்டாலும், தற்போதைய நிலை பல குடும்பங்களின் பொருளாதார அழுத்தத்தை வெளிப்படுத்துகிறது.

இதற்கான முக்கிய காரணங்கள்:

- Krankenkasse பிரீமியம் உயர்வு
- வாடகைச் செலவு அதிகரிப்பு
- உணவு மற்றும் அன்றாட பொருட்களின் விலை உயர்வு
- எரிபொருள் செலவு
- சம்பள உயர்வு inflation-ஐ முழுமையாக ஈடு செய்யாத நிலை

HSG பேராசிரியர் Reinecke கூறுவதன்படி, சேமிப்பு விகிதம் குறைவது குறுகிய காலத்தில் நுகர்வுக்கு நல்லதாகத் தோன்றலாம். ஆனால் நீண்டகாலத்தில் இது குடும்பங்களின் பாதுகாப்பு நிதி, ஓய்வூதியத் திட்டம் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்கு ஆபத்தாக மாறலாம்.

சுவிட்சர்லாந்தில் இளைஞர் வேலை இழப்பு record உயர்வு:

15—24 வயதினரில் 12.6% வேலை தேடுகின்றனர்



சுவிட்சர்லாந்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு நிலை கவலைக்குரிய அளவுக்கு மாறியுள்ளது. 2026 மூன்றாம் காலாண்டில், 15-24 வயதினரில் 12.6% பேர் வேலை இன்றி வேலை தேடி வருகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது. இது சுமார் 76,000 இளைஞர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

இங்கு கவனிக்க வேண்டியது: இந்த 12.6% என்பது ILO முறையில் கணக்கிடப்பட்ட, seasonally unadjusted / bruto அளவு. அதே BFS தரவு seasonally adjusted அடிப்படையில் 15-24 வயதினருக்கு 9.7% எனக் காட்டுகிறது. அதாவது headline வலுவாக இருந்தாலும், எந்த கணக்கீட்டு முறையைப் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியம்.

25-39 வயதினரிடமும் நிலை சிரமமாகிறது. குறிப்பாக University graduates வேலை சந்தையில் அதிக அழுத்தத்தை எதிர்கொள்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் உயர் கல்வி முடித்தவர்களிடையே வேலைஇழப்பு அதிகரித்துள்ளதாக 20 Minuten / Tages-Anzeiger தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எந்த துறைகளில் வாய்ப்பு இருக்கிறது?

Swiss Employers' Association ஆய்வை மேற்கோள் காட்டி வெளியான தகவலின்படி, higher vocational education – அதாவது தொழில்சார் மேம்பட்ட கல்வி – முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் நல்ல நிலையில் உள்ளன. காரணம், இந்த வகை பயிற்சிகள் நேரடியாக நிறுவனங்களின் தேவைகளுடன் தொடர்புடையவை.

ஆசிரியர்களுக்கு இன்னும் தேவை அதிகம்

Pedagogical universities-ல் கல்வி முடித்தவர்களுக்கு வேலை கிடைப்பது எளிதாக இருக்கலாம். Switzerland-ல் ஆசிரியர்கள் இன்னும் தேவைப்படுவதால், இந்த துறையில் வேலைவாய்ப்பு நிலை ஒப்பீட்டளவில் வலுவாக உள்ளது.

IT துறையில் புதிய சவால்: AI Informatik / IT துறையில் ஆரம்ப நிலை வேலைகளுக்கு சவால் அதிகரிக்கிறது. முன்பு junior programmers செய்த சில பணிகளை இன்று AI tools automate செய்ய ஆரம்பித்துள்ளன. இதனால் career தொடங்கும் இளைஞர்களுக்கு entry-level வாய்ப்புகள் குறையலாம்.

ஆனால் அதே நேரத்தில், AI புதிய வேலைகளையும் உருவாக்குகிறது. Companies தற்போது AI specialists-ஐ தேடுகின்றன. ஆனால் இந்த புதிய AI வேலைகள், எல்லா junior candidates-க்கும் உடனடி மாற்று வாய்ப்பாக அமையும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.





TAMINAA

AYURVEDIC WELLNESS

Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,

Rückenschmerzen, Nackenschmerzen, Schlafprobleme

DISCOUNT 25% OFF



BEST PRICE TREATMENT

Krankenkasse anerkannt!













- Entspannung
- Migränelindernde
- Stressabbau
- Nacken/Rückenschmerzen
- Schlafqualität

Rückenschmerzen/ Nackenschmerzen

Stress

Migräne/ Kopfschmerzen

Buchen Sie jetzt und erhalten Sie **25 % Rabatt** für November!

Nur für Sie!

Buchen Sie noch heute Ihren Termin!

+41 79 940 15 10

taminaa.ch

Hegibachstrasse 34B
8032 Zürich
Schweiz

Krankenkasse anerkannt!

WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL

ZUHAUSE
Hausbesuch

BÜRO
Firmenbesuch

HOTEL
Hotelbesuch

+41 79 940 15 10 | taminaa.ch | Hegibachstrasse 34B 8032 Zürich Schweiz

TAMINAA – Ihre Gesundheit in besten Händen

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

பத்திரிகை

வேதாந்தி : 004178 6264375

supeedsam@gmail.com

வாரத்தில்ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதழாக...

சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....

CLICK HERE

RAVI GOLD

தங்க நகை சேமிப்புத் திட்டம் 2027

மாதம் **CHF 100** | **12** மாதங்கள்

ஒவ்வொரு மாதமும் CHF 100 வீதம் 12 மாதங்கள் தொடர்ந்து செலுத்துங்கள்.

CHF 1,200 + CHF 50 = CHF 1,250



12 மாத சேமிப்பின் பின், வருட இறுதியில் **CHF 1,250** பெறுமதியான தங்க நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.

திட்ட விதிமுறைகளின்படி ஒவ்வொரு மாதமும் ஒருவருக்குத் தங்க நகைகள் வழங்கப்படும்.

தை மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் முற்பணத்தைச் செலுத்தி இணைந்துகொள்ளுங்கள்.

நேரில் வர முடியாதவர்கள் எம்முடன் தொடர்புகொண்டு **E-BANKING** மூலம் பணம் செலுத்தி இணையலாம்.

சிறிய சேமிப்பு • எதிர்கால முதலீடு

RAVI GOLDSCHMIED & JEWELLRY

IBAN CH52 0023 0230 7843 1001 L

JOSEFSTRASSE 105, 8005 ZÜRICH

043 818 20 50

079 615 78 50

Monday – Friday 10:00 – 19:00
Saturday 09:30 – 17:00

தகவல் கணனி தொழில்நுட்ப நிலையம்

உங்கள் எதிர்காலத்திற்கு ஒரு புதிய துவக்கம்!

புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்



எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள், ஊக்குவிப்புகள் எம்மால் வழங்கப்படுகின்றன.

அறிவு உங்கள் வெற்றியின் அடித்தளம்!

கணனி வகுப்புகள்

ECDL • SIZ • Windows 11

Word • Excel • PowerPoint • Access



NEW CLASS – ECDL

சனி 09:30 – 11:00

ஞாயிறு 09:30 – 11:00

NEW CLASS – A+

புதன் 18:00 – 20:00



Schnuppern • Zukunftstag • Lehrstellen • Praktikum

இன்றே பதிவு செய்யுங்கள்!

Seebahnstrasse 231, 8004 Zürich

Mano

043 811 80 90

LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES

சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!

சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.

BEST PRICE

எமது சேவைகள்:
- ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
- குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
- பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
- சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்

உங்கள் தேவைகளை தமிழில் பேசி, தரமாகப் பெற்றிடுங்கள்!

சிறப்பம்சங்கள்:
- இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
- சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
- நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.

VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch

GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch

NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch

இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96 www.lamelle-glass.ch

DEPANNAGE URGENCE 7/24
022 782 08 88

LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES

info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier

NOLIMIT ONE
GmbH

ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.

REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.

ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.



REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.



TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.



UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.

ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll

ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende

FLEXIBEL
Kurzfristig einsatzbereit

FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen

WARUM NOLIMIT ONE?

- Professionelle Arbeit & höchste Qualität
- Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
- Privatkunden, Firmen & Verwaltungen
- Individuelle Lösungen für Ihren Bedarf
- Termingerecht & zuverlässig



JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.

078 222 2126
nolimitone26@gmail.com

Ostschweiz
Unterwegs für Sie in der Region

Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt

Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft

No Limit One – wir machen den Unterschied.

www.nolimitone.ch

தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE

Danalakshmi
GROSSISTE DES GOÛTS DU MONDE
தனலடசுமி

உலக உணவுப் பொருட்களின் மொத்த விற்பனையாளர்

உங்கள் வணிகத்திற்குத் தேவையான
உணவுப் பொருட்கள் ஒரே இடத்தில்!

மளிகைக் கடைகள் • உணவகங்கள் • உணவு வழங்குநர்கள்



அரிசி வகைகள்



தேநீர் • பால்மா • கறித்தூள்



சமையல் எண்ணெய் • பால் • பானங்கள்

உங்கள் மொத்த விற்பனைத் தேவைகளை எங்களிடம் தெரிவியுங்கள்!

01 84 74 96 80 | danalakshmi.fr | 15 Impasse Bloch Prager 93120 La Courneuve, தியாகம்

மொத்த விற்பனை மட்டும்


Masala
KITCHEN
மிக விரைவில் திறப்பு!
COMING SOON
சுவிட்சர்லாந்தின் Olten நகரில்,
நம்மவரின் முயற்சியில் மிக விரைவில்
திறக்கப்படவுள்ள உணவகம்!
இலங்கை மற்றும் இந்திய
உணவுகளைக் குடும்பத்துடன்
சுவைத்து மகிழத் தயாராகுங்கள்!
Olten, Switzerland

VTS Finance GmbH

மருத்துவக் காப்பீடு 2027

காப்பீட்டுக் கட்டணங்களை ஒப்பிடுங்கள்!

சேமிப்புக்கான வாய்ப்பை அறியுங்கள்!



முக்கிய நாள்: 30 நவம்பர் 2026

உங்கள் மருத்துவக் காப்பீட்டை மாற்ற விரும்புகிறீர்களா?

உங்களுக்குப் பொருத்தமான காப்பீட்டைத் தேர்ந்தெடுக்க *V.T.S. Finance GmbH* உதவுகிறது.

- காப்பீட்டுக் கட்டணங்களை ஒப்பிடுதல்
- பொருத்தமான காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்வு செய்தல் (Hausarzt, HMO, Telmed)
- மேலதிக காப்பீடுகள் குறித்து ஆலோசனை (வெளிநோயாளர், மருத்துவமனை, மாற்று மருத்துவம், வெளிநாடு)
- தனிப்பட்ட ஆலோசனை — கட்டாயப் பொறுப்பின்றி
- காப்பீட்டு நிறுவனத்தை மாற்ற உதவி

கடைசி நேரம் வரை காத்திருக்க வேண்டாம்!

அடிப்படைக் காப்பீட்டை நிறுத்தும் கடிதம், பொதுவாக **30 நவம்பர் 2026க்குள்** தற்போதைய காப்பீட்டு நிறுவனத்திற்குக் கிடைக்க வேண்டும்.

V.T.S. Finance GmbH
Gartenstadtstrasse 5
3098 Köniz

தொலைபேசி / WhatsApp
078 920 58 58
info@vtsfinance.ch

ஆலோசனைக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்!

உங்கள் ஆரோக்கியம். உங்கள் பாதுகாப்பு. எங்கள் ஆலோசனை.

VTS Finance GmbH

Beste Gelegenheit

உங்கள் கனவு இல்லம் மவுண்ட் லவினியாவில்!



No.20, Beach Road, Mt. Lavinia, Sri Lanka

அன்புடைய வாடிக்கையாளர்களே

மவுண்ட் லவினியாவின் சிறந்த இடத்தில் உங்கள் கனவு வீட்டை வாங்குங்கள்.

20% முன்பணம் | மீதித் தொகை 24 தவணைகளில்

Unit Type	Type A	Type B	Type C	Type D	Type E	Type F
Area	1075 sqft	900 sqft	880 sqft	1075 sqft	975 sqft	1780 sqft
First Floor	Rs.40.85 m	Rs.34.20 m	Rs.33.44 m	Rs.40.85 m	Rs.37.05 m	
Second Floor	Rs.40.85 m	Rs.34.20 m	Rs.33.44 m	Sold	Rs.37.05 m	
Third Floor	Rs.40.85 m	Rs.34.20 m	Rs.33.44 m	Sold	Rs.37.05 m	
Fourth Floor	Rs.40.85 m			Sold	Sold	Rs.67.64 m
Fifth Floor	Sold			Sold	Sold	Sold
Sixth Floor	Rs.40.85 m			Rs.40.85 m	Rs.37.05 m	Rs.67.64 m

மேலும் தகவல்களுக்கு எம்மைத் தொடர்புகொள்ளுங்கள்

078 920 58 58 | info@vtsfinance.ch

சுவிட்சர்லாந்தில் 2027 வேலைவாய்ப்பு சந்தை: AI திறன் இனி கூடுதல் திறன் அல்ல அடிப்படைத் தேவையாகிறது



சுவிட்சர்லாந்தில் 2027 வேலைவாய்ப்பு சந்தை மேலும் தேர்வானதும், போட்டி அதிகமானதுமானதாக மாறும் என Michael Page Switzerland-ன் Salary Guide 2027 காட்டுகிறது. இந்த guide, 2026 முதல் பாதியில் நடந்த recruitment assignments மற்றும் employers/candidates உடனான ஆயிரக்கணக்கான உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டது.

Michael Page தகவலின்படி, 2027 Salary Guide சுவிட்சர்லாந்தில் 535 roles வரை சராசரி சம்பளத் தரவுகளையும் வேலைவாய்ப்பு சந்தை போக்குகளையும் வழங்குகிறது. சம்பளங்கள் பொதுவாக gross annual fixed salary ஆகக் காட்டப்படுகின்றன; அனுபவம், நிறுவனம், location, sector ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும்.

AI திறன் – இப்போது வேலைக்கு அடிப்படைத் திறன்

2026-ல் AI பயன்பாடு வேலைவாய்ப்பு சந்தையில் வேகமாக உயர்ந்துள்ளது. Michael Page-ன் தகவலின்படி, Swiss-based employees-ல் 32% பேர் தங்கள் பணியில் AI பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர்; இது European average ஆன 23%-ஐ விட அதிகம்.

முன்னர் "AI தெரிந்தால் கூடுதல் பலம்" என கருதப்பட்ட நிலையில், 2027 வேலைவாய்ப்பு சந்தையில் பல office jobs-க்கு AI பயன்பாடு ஒரு அடிப்படைத் திறனாக மாறுகிறது. அதனால் job seekers தங்கள் CV-யில் "AI tools பயன்படுத்த தெரியும்" என்று மட்டும் எழுதாமல், அதை எந்த பணியில் எப்படி பயன்படுத்தினார்கள் என்பதையும் தெளிவாகக் காட்ட வேண்டும்.

Michael Page வெளியிட்ட Talent Trends 2026 Switzerland தகவலின்படி, 86% Swiss jobseekers தங்கள் job search-ல் AI பயன்படுத்துகின்றனர்; அதே நேரத்தில் 69% employers recruitment process-ல் AI பயன்படுத்துகின்றனர். அதாவது candidates AI-ஐ employers-ஐ விட வேகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

வேலை தேடல் மெதுவாகவும் கடினமாகவும் மாறலாம்

Companies அதிக financial pressure-ஐ சந்திக்கும்

நிலையில், hiring process மேலும் selective ஆகிறது. Michael Page 2027 Salary Report-ஐ பற்றிய தகவலின்படி, சுவிட்சர்லாந்தில் சம்பளங்கள் பொதுவாக நிலையாக இருந்தாலும், business-critical skills உள்ள துறைகளில் மட்டும் wage growth தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக AI & machine learning, banking compliance, relationship management, construction, sales போன்ற திறன்களுக்கு demand உள்ளது.


இதன் அர்த்தம்: 2027-ல் job seekers பல application அனுப்புவது மட்டும் போதாது. Sector knowledge, AI பயன்பாடு, adaptability, communication skills, practical experience ஆகியவை ஒன்றாகத் தேவைப்படும்.

எந்த துறைகளில் சம்பள உயர்வு வாய்ப்பு?

Michael Page Salary Report 2027 படி, சுவிட்சர்லாந்தில் சில high-demand roles-ல் சம்பள நிலை வலுவாக உள்ளது. குறிப்பாக IT, banking compliance, private banking relationship management, construction மற்றும் sales துறைகளில் திறமையானவர்களுக்கு வாய்ப்பு அதிகம்.

உதாரணமாக, Michael Page Salary Guide-ல் Private Banking Relationship Manager Assistant role-க்கு annual salary range CHF 80,000 முதல் CHF 125,000 வரை காட்டப்பட்டுள்ளது. இது seniority மற்றும் role-specific factors அடிப்படையில் மாறுபடும்

சுவிட்சர்லாந்து வாழ்க்கைச் செலவு குறித்து மக்கள் கவலை அதிகரிப்பு



சுவிட்சர்லாந்தில் வாழ்க்கைச் செலவு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பலர் தங்கள் மாதாந்திர செலவுகளை சமாளிப்பதில் அதிக அழுத்தத்தை உணர்கிறார்கள்.

WTW consulting firm நடத்திய சமீபத்திய survey படி, சுவிட்சர்லாந்தில் பணிபுரியும் மக்களில் 38% பேர், நிதி பிரச்சினைகள் தங்கள் வாழ்க்கையை எதிர்மறையாக பாதிக்கின்றன என்று தெரிவித்துள்ளனர். இது 2024-இல் 25% ஆக இருந்தது.

அதே survey-யில், சுமார் 49% employees, தங்கள் பெற்றோர் தலைமுறையுடன் ஒப்பிடும்போது ஓய்வூதிய காலத்தில் தாங்கள் குறைவான நிதி நிலையில் இருப்போம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

மேலும், கடுமையான நிதி கவலை கொண்டவர்கள் retirement savings-ல் பின்னடைவு அடைவதற்கான வாய்ப்பு அதிகம் என WTW குறிப்பிடுகிறது.

Camera Glasses சுவிட்சர்லாந்தில் Boom: Privacy ஆபத்தா, புதிய தொழில்நுட்பமா?



சுவிட்சர்லாந்தில் camera உடன் வரும் Smart Glasses / Kamerabrillen விற்பனை வேகமாக அதிகரித்து வருகிறது. Digitec Galaxus தகவலின்படி, 2026 ஜனவரி முதல் செப்டம்பர் வரை Smart Glasses விற்பனை முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது +307% உயர்ந்துள்ளது; அதாவது விற்பனை நான்கு மடங்காகியுள்ளது.

இந்த கண்ணாடிகளை வாங்குவோரில் பெரும்பாலானோர் ஆண்கள் என்றும் Galaxus தெரிவித்துள்ளது. Smart Glasses வாங்குபவர்களில் 87% ஆண்கள் எனக் கூறப்படுகிறது. Ray-Ban, Xreal, RayNeo போன்ற பிராண்டுகள் அதிகம் விற்பனையாகியுள்ளன.

ஆனால் இதே நேரத்தில், privacy குறித்த எதிர்ப்பும் அதிகரிக்கிறது. இந்த கண்ணாடிகள் அணிந்தவர் பார்க்கும் திசையில் photo அல்லது video எடுக்க முடியும் என்பதால், பிறர் அறியாமல் படம் பிடிக்கப்படும் அபாயம் உள்ளது. குறிப்பாக swimming pools, fitness centres, public transport, பள்ளிகள், குழந்தைகள் இருக்கும் இடங்கள் போன்ற சூழல்களில் இந்த பிரச்சினை அதிகமாக பேசப்படுகிறது.

Swiss NGO Digitale Gesellschaft இந்த smart glasses தனியுரிமைக்கு பெரிய சவாலாக மாறும் என்று எச்சரிக்கிறது. அதன் spokesperson Martin Steiger, இத்தகைய சாதனங்கள் மனிதர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறோம் என்ற உணர்வை உருவாக்கி, அவர்களின் இயல்பான நடத்தை மாறக்கூடும் என்று கூறுகிறார்.

சுவிஸ் swimming pool associations ஏற்கனவே camera glasses மீது தெளிவான விதிகள் அல்லது தடை தேவை என்று பரிந்துரைத்துள்ளன. காரணம், பிறர் அறியாமல் படம் எடுப்பது, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான privacy மற்றும் safety பிரச்சினைகளை உருவாக்கலாம்.

Digitec Galaxus தானே இந்த smart glasses-ஐ விற்பனை செய்தாலும், அதே நேரத்தில் அவற்றின் சமூக மற்றும் privacy விளைவுகள் குறித்து விமர்சனமாக எழுதுகிறது. இது வணிகமும் பொறுப்பும் இடையே உள்ள “moral dilemma” என பார்க்கப்படுகிறது.

Frauenfeld பொதிச் சோதனை: ‘விளையாட்டுப் பணம்’ என அனுப்பப்பட்ட போலி யூரோ, டொலர் நோட்டுகள் பறிமுதல்!



Thurgau கன்டோனின் Frauenfeld பொதி விநியோக மையத்தில், உண்மையான பணத்தாள்களைப் போன்று தோற்றமளித்த யூரோ மற்றும் அமெரிக்க டொலர் நோட்டுப் பிரதிகளை மத்திய சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்பு அலுவலகமான BAZG கைப்பற்றியுள்ளது.

ஒக்டோபர் மாத நடுப்பகுதியில், ஜெர்மனியிலிருந்து Basel-Landschaft கன்டோனில் வசிக்கும் ஒருவருக்கு அனுப்பப்பட்ட பொதியைச் சுங்கப் பணியாளர்கள் சோதனையிட்டபோது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

பொதிக்குள் 53,485 யூரோ மற்றும் 14,894 அமெரிக்க டொலர் என முகப்பில் குறிப்பிடப்பட்ட மதிப்புகளைக் கொண்ட நோட்டுப் பிரதிகள் இருந்தன. இவை உண்மையான பணமல்ல.

பொருட்கள் ‘விளையாட்டுப் பணம்’ என அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றின் அளவும் தோற்றமும் உண்மையான பணத்தாள்களுடன் குழப்பமடையச் செய்யக்கூடிய வகையில் இருந்ததாக BAZG தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்தில், உண்மையான பணத்தாள்களுடன் குழப்பமடையக்கூடிய நோட்டுப் பிரதிகள், அவை தயாரிக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் நோக்கம் எதுவாக இருந்தாலும் கள்ளநோட்டுகளாகக் கருதப்படுவதாக அந்த அலுவலகம் விளக்கியுள்ளது. இதையடுத்து, கைப்பற்றப்பட்ட நோட்டுகள் Basel-Landschaft பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இத்தகைய நோட்டுப் பிரதிகள் இணையத்தில் “Movie Money”, “Prop Copy”, “Specimen”, “Spielbanknoten” போன்ற பெயர்களில் விற்கப்படுவதாகவும் BAZG சுட்டிக்காட்டியுள்ளது.

இணையத்தில் விளையாட்டுப் பணத்தை வாங்கும்போது எச்சரிக்கையாக இருக்குமாறும், கொள்வனவுக்கு முன்னர் மத்திய பொலிஸ் அலுவலகமான fedpol வழங்கும் தகவல்களைப் பார்வையிடுமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


THIS IS TAMIL
தமிழர் பெருமையை அணியுங்கள்!
வரலாறு • பண்பாடு • அடையாளம்
கீழடி | சங்கம் | அரிக்கமேடு | யாழ்ப்பாணம்
தமிழர் கதைகளைச் சொல்லும்
T-Shirts & Hoodies
AVVAIYAR
WORDS OUTLIVE EMPIRES
THIS IS TAMIL
தமிழ்
JAFFNA
KNOWLEDGE. MEMORY. IDENTITY.
AMMA
OUR FIRST HOME.
JAFFNA
KNOWLEDGE. MEMORY. IDENTITY.
இலங்கையில் நம்மவர்களின்
வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி,
வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் ஓர் முயற்சி.
thisistamil.co
thisistamil.co/en/collections/tamil-history
உலகளாவிய விநியோகம்
தொகுப்பைப் பார்வையிடுங்கள் ›

முதியோருக்கு 20% வீடுகள் ஒதுக்கீடு: நவம்பர் 29இல் Zürich நகரில் வாக்கெடுப்பு!



மாற்று முன்மொழிவில் CHF 100 மில்லியன் நிதியுதவி – இரண்டையும் நிராகரிக்க நகர செயற்குழு பரிந்துரை

Zürich நகர நிர்வாகத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளில் முதியோருக்கு வீடுகளை ஒதுக்குவது தொடர்பான SVP கட்சியின் மக்கள் முன்முயற்சியும், அதற்கான மாற்று முன்மொழிவும் நவம்பர் 29ஆம் திகதி நகர மக்களின் வாக்கெடுப்புக்கு வருகின்றன.

நகரில் நிலவும் வீட்டுத் தட்டுப்பாடு மற்றும் அதிக வாடகைக்கு மத்தியில், முதியவர்கள் தங்களுக்குப் பொருத்தமான வீடுகளைக் கண்டுபிடிப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதாக SVP தெரிவிக்கிறது. இதற்குத் தீர்வாக, நகர நிர்வாகத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளில் 20 சதவீதமான வீடுகளை 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்காக ஒதுக்க வேண்டும் என அக்கட்சியின் முன்முயற்சி கோருகிறது.

எனினும், நிலையான 20 சதவீத ஒதுக்கீட்டுக்கு நகர நாடாளுமன்றமான Gemeinderat-இல் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. இதையடுத்து, மக்கள்தொகையில் முதியோரின் விகிதத்துக்கு ஏற்ப குடியிருப்பு ஒதுக்கீட்டை அமைக்கும் மாற்று முன்மொழிவு உருவாக்கப்பட்டது.

இதன்படி, நகர நிர்வாகத்தின் குடியிருப்புகளில் வசிக்கும் முதியோரின் விகிதம், Zürich நகரின் மொத்த மக்கள்தொகையில் அந்த வயதினரின் விகிதத்துக்குக் குறைந்தபட்சம் சமமாக இருக்க வேண்டும். 2045ஆம் ஆண்டுக்குள் நகர மக்கள்தொகையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுமார் 22 சதவீதமாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், முதியோருக்குப் பொருத்தமான கட்டடங்களை வாங்குவதற்காக, நகரின் முதியோர் குடியிருப்பு அறக்கட்டளையான Stiftung Alterswohnungen der Stadt Zürich (SAW) அமைப்புக்கு ஒருமுறை 100 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் வழங்கவும் மாற்று முன்மொழிவு வழிவகுக்கிறது.

இந்த மாற்று முன்மொழிவுக்கு SP, பசுமைக் கட்சி மற்றும் GLP ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன. AL கட்சி, வாக்காளர்கள் தமது விருப்பப்படி முடிவெடுக்கலாம் என அறிவித்துள்ளது. தற்போது நகர நிர்வாகத்தின் குடியிருப்புகளில் வசிப்பவர்களில் 19 சதவீதமானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சுகாதாரத் துறைப் பொறுப்பாளர் Andreas Hauri, நிதித்துறைப் பொறுப்பாளர் Daniel Leupi உள்ளிட்ட Zürich நகர செயற்குழுவினர் இரு முன்மொழிவுகளையும் நிராகரிக்குமாறு பரிந்துரைக்கின்றனர்.

முதியோருக்குப் பொருத்தமான வீடுகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தை ஏற்றுக்கொள்ளும் நகர செயற்குழு, SVP கோரும் நிலையான 20 சதவீத ஒதுக்கீடு நடைமுறையில் போதிய நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருக்காது எனக் கருதுகிறது.

மாற்று முன்மொழிவில் இடம்பெற்றுள்ள 100 மில்லியன் பிராங்குகள் நிதி ஒதுக்கீட்டுக்கும் செயற்குழு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. நகரின் கடன் அதிகரிக்கும் அபாயம் உள்ள நிலையில், இச்செலவு ஏனைய முக்கிய திட்டங்களுக்கான நிதியைப் பாதிக்கக்கூடும் என்பதே அதன் வாதமாகும்.

Bern கன்டோன்: 2008இல் பிறந்த சுமார் 9,300 இளைஞர்கள் முதல் முறையாக வரிப் பிரகடனம் சமர்ப்பிக்க வேண்டும்!



சொந்த வருமானம் இல்லாவிட்டாலும் 2026ஆம் ஆண்டுக்கான விபரங்களைச் சமர்ப்பிப்பது அவசியம்

Bern கன்டோனில் 2008ஆம் ஆண்டு பிறந்த சுமார் 9,300 இளைஞர்கள், எதிர்வரும் 2027ஆம் ஆண்டில் முதல் முறையாகத் தங்களது வரிப் பிரகடனத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரகடனம் 2026ஆம் ஆண்டுக்கான வருமானம் மற்றும் சொத்து விபரங்களைப் பற்றியதாகும். இவர்கள் ஏற்கெனவே சொந்த வருமானம் ஈட்டியிருந்தாலும் இல்லாவிட்டாலும், வரிப் பிரகடனத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

18 வயதை எட்டியுள்ள இளைஞர்களுக்கு அவர்களது வரிக் கடமை குறித்து Bern கன்டோன் வரி நிர்வாகம் தற்போது கடிதம் மூலம் அறிவித்து வருவதாக, கன்டோன் நிதி இயக்குநரகம் நவம்பர் 16ஆம் திகதி தெரிவித்துள்ளது.

துபாய் THE RISE 17வது சர்வதேச மாநாடு: மறக்க முடியாத அனுபவம் என சுவிஸ் தலைவர் சிறி இராசமாணிக்கம் நெகிழ்ச்சி!









துபாயில் நடைபெற்ற THE RISE அமைப்பின் 17வது சர்வதேச மாநாடு, தனது மனதில் என்றும் நிலைத்திருக்கும் மறக்க முடியாத அனுபவமாக அமைந்ததாக THE RISE Switzerland தலைவர் சிறி இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

துபாய் THE RISE 17வது சர்வதேச மாநாடு: மறக்க முடியாத அனுபவம் என சுவிஸ் தலைவர் சிறி இராசமாணிக்கம் நெகிழ்ச்சி!

மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாட்டை உற்சாகத்துடன் வழிநடத்திய அருட்தந்தை Rev. Dr. Jegath Gaspar Raj அவர்களுக்கும், ஏற்பாட்டுப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட THE RISE UAE அணியினர் மற்றும் தலைமையகக் குழுவினருக்கும் அவர் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, THE RISE சுவிட்சர்லாந்து உறுப்பினர்கள் வெளிப்படுத்திய அன்பு, ஆதரவு, ஒற்றுமை மற்றும் ஆர்வமான பங்கேற்பு தன்னை நெகிழச் செய்ததாகவும், அவர்களுடன் பகிர்ந்த தருணங்கள் என்றும் இனிய நினைவுகளாகத் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாடு புதிய கனவுகள், வாய்ப்புகள் மற்றும் ஒன்றிணைந்த சாதனைகளுக்கான தொடக்கமாக அமைந்துள்ளதாகத் தெரிவித்த சிறி இராசமாணிக்கம், அதே அன்புடனும் புதிய இலக்குகளுடனும் மீண்டும் சந்திப்போம் எனத் தனது நன்றிச் செய்தியில் கூறியுள்ளார்.





மத்திய சுவிஸின் 4 கன்டோன்களில் தோல் புற்றுநோய் அதிகரிப்பு!



ஆண்களில் 15%, பெண்களில் 11% உயர்வு — ஒட்டுமொத்த புற்றுநோய் இறப்பு விகிதம் குறைவு

Luzern, Uri, Obwalden மற்றும் Nidwalden ஆகிய நான்கு கன்டோன்களில் தோல் புற்றுநோய் புதிதாகக் கண்டறியப்படும் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக, LUSTAT புள்ளிவிவரங்களை மேற்கோள்காட்டி Radio Central செய்தி வெளியிட்டுள்ளது.

2019 முதல் 2023 வரையான காலப்பகுதியில், இந்த நான்கு கன்டோன்களின் மக்கள்தொகையில் ஆண்டுதோறும் சுமார் 0.5 சதவீதமானோருக்குப் புதிதாகப் புற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது. இது அனைத்து வகைப் புற்றுநோய்களையும் உள்ளடக்கிய விகிதமாகும்.

2014-2018 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், தோல் புற்றுநோயின் புதிய நோயறிதல் விகிதம் ஆண்களில் 15 சதவீதமும் பெண்களில் 11 சதவீதமும் அதிகரித்துள்ளது. ஆண்களில் புரோஸ்டேட் புற்றுநோய் விகிதம் 14 சதவீதமும், பெண்களில் மார்பகப் புற்றுநோய் விகிதம் 2 சதவீதமும் உயர்ந்துள்ளது.

நான்கு கன்டோன்களிலும் ஆண்டுக்கு சராசரியாக 1,617 ஆண்களுக்கும் 1,254 பெண்களுக்கும் புதிதாகப் புற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது. ஆண்களில் புரோஸ்டேட் புற்றுநோயும், பெண்களில் மார்பகப் புற்றுநோயும் அதிகமாகப் பதிவாகியுள்ளன.

இவற்றுடன் நுரையீரல், பெருங்குடல் மற்றும் மெலனோமா எனப்படும் தோல் புற்றுநோயையும் சேர்த்து, இந்த ஐந்து வகைகள் மொத்த புதிய நோயறிதல்களில் 60 சதவீதமாக இருந்துள்ளன.

அதேவேளை, ஒட்டுமொத்த புற்றுநோய் இறப்பு விகிதம் முந்தைய காலப்பகுதியைவிடக் குறைந்துள்ளது. ஆண்களில் ஒரு இலட்சம் பேருக்கு 264 ஆக இருந்த இறப்பு விகிதம் 244 ஆகவும், பெண்களில் 162 ஆக இருந்த விகிதம் 147 ஆகவும் குறைந்துள்ளது.

2019-2023 காலப்பகுதியில் ஆண்டுக்கு சராசரியாக 586 ஆண்களும் 432 பெண்களும் புற்றுநோயால் உயிரிழந்துள்ளனர். இந்த நான்கு கன்டோன்களிலும் பதிவான மொத்த இறப்புகளில் ஏறக்குறைய நான்கில் ஒன்று புற்றுநோயால் ஏற்பட்டதாகச் செய்தி தெரிவிக்கிறது.

Zürich: பாடசாலை ஆவணங்களைப் பார்வையிட பெற்றோருக்கு நீதிமன்றம் அனுமதி!



கோரப்பட்ட பெரும்பாலான ஆவணங்களை வழங்க உத்தரவு — தீர்ப்பு இன்னும் இறுதியாகவில்லை

Zürich கன்டோனில் தமது பிள்ளைகள் கல்வி பயிலும் ஆரம்பப் பாடசாலையின் கல்வித் தரம் குறித்து சந்தேகம் எழுப்பிய பெற்றோர், பாடசாலை ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகத் தொடர்ந்த வழக்கில் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளனர்.

பெற்றோர் கோரிய பெரும்பாலான ஆவணங்களை வழங்குமாறு Zürich நிர்வாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக, அண்மையில் வெளியிடப்பட்ட தீர்ப்பை மேற்கோள்காட்டி Radio Central செய்தி வெளியிட்டுள்ளது.

ஆசிரியர் கூட்டங்களின் பதிவுகள், பாடசாலை மதிப்பீட்டு ப் பிரிவின் அறிக்கை, கற்பித்தல் திட்டங்கள், பாடப்பொருட்களின் பட்டியல் மற்றும் அவை வாங்கப்பட்டதற்கான ஆதாரங்கள், பயன்படுத்தப்பட்ட பயிற்சித் தாள்கள், Lehrplan 21 பாடத்திட்டம் பின்பற்ற ப்படுவதற்கான சான்றுகள் உள்ளிட்டவற்றைப் பெற்றோர் கோரியிருந்தனர்.

2025 ஏப்ரலில் பாடசாலை சில ஆவணங்களை வழங்கியிருந்தது. எனினும், அனைத்தையும் வழங்குவது அளவுக்கு அதிகமான பணிச்சுமையை ஏற்படுத்தும் எனத் தெரிவித்து, ஏனைய ஆவணங்களை வழங்க மறுத்திருந்தது. இதனை ஏற்காத பெற்றோர் நிர்வாக நீதிமன்றத்தை நாடினர்.

ஆசிரியர்களின் தனிப்பட்ட குறிப்புகளுக்கு விதிவிலக்கு

ஆசிரியர்களின் தனிப்பட்ட குறிப்புகள் மற்றும் விரிவான தனிப்பட்ட கற்பித்தல் திட்டங்களை வழங்க வேண்டியதில்லை என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இவை ஆசிரியர்களின் சொந்தப் பணிக்கான உதவிக் குறிப்புகள் என்றும், பிறருக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல என்றும் விளக்கப்பட்டுள்ளது.

மேலும், இல்லாத குறிப்புகளைப் புதிதாக உருவாக்குவதையோ ஒவ்வொரு ஆசிரியரும் பதிவுகளைத் தயாரிப்பதையோ கோர முடியாது எனவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

ஆசிரியர் கூட்டப் பதிவுகளை வழங்கும்போது, யார் என்ன கருத்துத் தெரிவித்தார் என்பதை அடையாளம் காண முடியாதவாறு ஆசிரியர்களின் பெயர்களை மறைக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் அளவுக்கு அதிகமான பணிச்சுமை ஏற்பட்டால், அதற்கான செலவைப் பெற்றோரிடம் வசூலிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு இன்னும் சட்டரீதியாக இறுதியாகவில்லை. இரு தரப்பினரும் சுவிஸ் மத்திய உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்

மரண அறிவித்தல்

ஐயந்திமாலா

அழகு குணசீலன் - அருள் செல்வநாயகம்

தோற்றம்: 10.06.1957 மறைவு: 14.11.2026



எங்கள் வீட்டு நிலவு நித்தியமாய் மறைந்தது.
அமாவாசை இருள் சூழ்ந்தது.

பார்வையிடல்

18.11.2026 - 19.11.2026

10.00 - 12.00 / 16.00 - 18.00

இறுதிக் கிரியைகள்

20.11.2026 | 09.00 - 12.00

இடம்

Friedhof Friedental

Friedentalstrasse 60, 6004 Luzern

K

KAMAL KREDIT

KAMAL KREDIT &
HYPOTHEK IMMOBILIEN

உங்கள் கனவுகளுக்கு வழிகாட்டும் நிதிச் சேவைகள்

வங்கிக்கடன்

வங்கிக்கடன் பெறுவதில் உள்ள தடைகளைச் சரிசெய்து, கடன் பெற உதவுகிறோம்.

வீட்டுக்கடன் (Hypothek)

நீங்கள் விரும்பிய இடத்தில் வீடு, காணி வாங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்குகிறோம்.

ஆயுள் காப்புறுதி
Lebensversicherung

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்திற்கான ஆயுள் காப்புறுதிச் சேவைகள்.

இன்றே தொடர்புகொள்ளுங்கள்!

043 333 5971 | 079 650 2615

swisssenthu@hotmail.com | info@kamalkredit.ch

Zuercherstrasse 47b, 8426 Lufingen Switzerland

www.kamalkredit.ch



சில கிளிக்குகளில் Krankenkasse மாற்ற முடியுமா?

சுவிட்சர்லாந்தில் புதிய முன்மொழிவு

சுவிட்சர்லாந்தில் மருத்துவ காப்பீட்டு கட்டணங்கள் ஆண்டுதோறும் அதிகரித்தாலும், தங்கள் Krankenkasse-ஐ மாற்றும் மக்கள் இன்னும் குறைவாகவே உள்ளனர்.

Federal Statistical Office தகவலின்படி, காப்பீட்டு நிறுவனத்தை மாற்றுவோர் சுமார் 8% மட்டுமே. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று – தற்போதைய நிர்வாக நடைமுறைகள் சிக்கலாக இருப்பது.

இதனை எளிமைப்படுத்தும் நோக்கில், Grünliberale கட்சியைச் சேர்ந்த Nationalrat Patrick Hässig புதிய Motion ஒன்றை முன்வைத்துள்ளார். அதன்படி, அனைத்து மருத்துவ காப்பீட்டு நிறுவனங்களும் ஒரே மாதிரியான முழுமையான டிஜிட்டல் Kündigung நடைமுறையை வழங்க வேண்டும்.

இது நடைமுறைக்கு வந்தால், மக்கள் தங்கள் Krankenkasse-ஐ மாற்றுவதற்கு இனி கடிதம் அனுப்புதல், Einschreiben போன்ற சிக்கலான நடைமுறைகள் குறையலாம்.

இந்த முன்மொழிவை Federal Council ஏற்க பரிந்துரைத்துள்ளது. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

Waadt கன்டோனைச் சேர்ந்த Grünen Nationalrätin Léonore Porchet, மக்கள் தங்களுக்கு உள்ள Krankenkasse மாற்ற உரிமையை எளிதாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் முறைமையை மாற்றுவது நல்லது என தெரிவித்துள்ளார்.

Genf FDP Nationalrat Cyril Aellen அவர்களும் இந்த யோசனையை ஆதரிக்கிறார். ஒரே மாதிரியான டிஜிட்டல் நடைமுறை நிர்வாகச் சுமையைக் குறைக்கும் என்றும், போட்டியை அதிகரிப்பதன் மூலம் Prämien அழுத்தத்தைக் குறைக்க உதவக்கூடும் என்றும் அவர் கருதுகிறார்.

தற்போது, பலரும் Krankenkasse மாற்ற விரும்பினால், தங்கள் பழைய காப்பீட்டு நிறுவனத்துக்கு பொதுவாக எழுத்து மூலம் Kündigung அனுப்ப வேண்டும். பெரும்பாலும் இது Einschreiben மூலம் அனுப்பப்படுகிறது.

மதுபோதையில் கார் செலுத்திய பெண் விபத்து

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல்!



Thurgau கன்டோனின் Weinfelden பகுதியில் மதுபோதையில் கார் செலுத்திய 26 வயதுடைய பெண், வீதியின் நடுத்தீவு மற்றும் தெருவிளக்குக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

நவம்பர் 16ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை, நள்ளிரவுக்குச் சற்று பின்னர் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. ஸ்லோவாக்கியா நாட்டைச் சேர்ந்த அப்பெண், Kreuzlingerstrasse வீதியில் Mauren நோக்கிப் பயணித்துள்ளார்.

Konstanzerstrasse சந்திப்புக்குச் சற்று முன்னர், அவரது கார் வீதியின் நடுத்தீவிலும் தெருவிளக்குக் கம்பத்திலும் மோதியதாக Thurgau கன்டோன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் பல பத்தாயிரம் சுவிஸ் பிராங்குகள் பெறுமதியான சொத்துச் சேதம் ஏற்பட்டுள்ளது.

சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட சுவாச மதுச்சோதனையில் 0.81 mg/l அளவு பதிவாகியுள்ளது. இதையடுத்து, அவரது சாரதி அனுமதிப்பத்திரம் வீதிப் போக்குவரத்து அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்காகப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.





Europe-ல் காதல் சந்திப்புக்கு அதிக செலவு:

Geneva முதலிடம், Zurich இரண்டாம் இடம்

Europe-ல் ஒருவருடன் Date செல்ல அதிக செலவு ஆகும் நகரங்களில் Geneva முதலிடமும், Zurich இரண்டாம் இடமும் பிடித்துள்ளன. இது Deutsche Bank Research Institute வெளியிட்ட Mapping the World's Prices 2026 அறிக்கையின் Cheap Date Index அடிப்படையில் வெளியிடப்பட்ட தகவல்.

இந்த Index-ல் ஒரு "cheap date" செலவை கணக்கிடும் போது, ஒரு bottle wine, jeans, dress, இரண்டு coffee, இருவருக்கான உணவு, இரண்டு cinema tickets, public transport tickets மற்றும் 5 km taxi பயணம் ஆகியவை சேர்த்து பார்க்கப்படுகின்றன. ஆனால் இதில் உடைச் செலவுகளும் சேர்க்கப்படுவதால், இது உணவு அல்லது cinema செலவு மட்டும் அல்ல என்பதை கவனிக்க வேண்டும்.

அந்த கணக்குப்படி, Geneva-வில் ஒரு Date செலவு €407 ஆகும். இது சுமார் CHF 376. Zurich-ல் €400, அதாவது சுமார் CHF 370 செலவாகும். இதன் மூலம் Switzerland-ன் இரண்டு முக்கிய நகரங்களும் Europe-ல் மிக அதிக செலவு ஆகும் இடங்களாக தரவரிசையில் மேலிடம் பிடித்துள்ளன.

மூன்றாம் இடத்தில் Copenhagen மற்றும் Oslo உள்ளன. இங்கு செலவு €323. அதே நேரத்தில் Istanbul Europe-ல் மிகக் குறைந்த செலவு ஆகும் நகரமாக குறிப்பிடப்பட்டுள்ளது; அங்கு ஒரு date செலவு €168. Rome €195, Barcelona €213 என குறைவான செலவு கொண்ட நகரங்களாக பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

ஆனால் சம்பளத்தை கணக்கில் எடுத்தால் படம் மாறுகிறது. Geneva மற்றும் Zurich-ல் செலவு அதிகமாக இருந்தாலும், அங்குள்ள உயர்ந்த சம்பளத்தால் அந்த date செலவு மாதாந்திர net salary-யில் குறைந்த பங்கையே எடுத்துக்கொள்கிறது. Zurich-ல் இது சராசரி மாத net salary-யின் 5.6%, Geneva-ல் 6.4% மட்டுமே என தெரிவிக்கப்படுகிறது.

மாறாக, Athens-ல் ஒரு date செலவு €222 என்றாலும், அது அங்குள்ள சராசரி மாத வருமானத்தின் 19.6% ஆகும். Istanbul-ல் 16.7%, Lisbon-ல் 16.3% என சம்பளத்துடன் ஒப்பிடும்போது அதிக சுமையாக மாறுகிறது.

ஜெர்மனியில் Shopping செல்லும் சுவிஸ் மக்களுக்கு முக்கிய செய்தி:

€50 VAT refund விதி 2028 வரை நீடிக்கலாம்



சுவிட்சர்லாந்திலிருந்து ஜெர்மனி எல்லை நகரங்களுக்கு சென்று குறைந்த விலையில் shopping செய்வோர், ஜெர்மன் VAT refund பெறும் €50 குறைந்தபட்ச விதி விரைவில் நீக்கப்படும் என எதிர்பார்த்திருந்தனர். ஆனால் தற்போது அந்த விதி 2028 டிசம்பர் 31 வரை நீடிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

2020 முதல், சுவிஸ் மக்கள் ஜெர்மனியில் shopping செய்தால், German VAT refund பெறுவதற்கு ஒரே ரசீதில் குறைந்தது €50 செலவிட்டிருக்க வேண்டும். சாதாரண பொருட்களுக்கு ஜெர்மனியில் VAT 19%, உணவுப் பொருட்களுக்கு 7% என்பதால், இந்த refund பலருக்கு சேமிப்பாக அமைகிறது.

ஜெர்மன் Bundestag-ன் Haushaltsausschuss நவம்பர் 11 அன்று இந்த €50 Bagatellgrenze-ஐ 2028 இறுதி வரை தொடரும் வகையில் மாற்றத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. எனினும், இது இன்னும் இறுதி சட்டமாகவில்லை; ஜெர்மன் பாராளுமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

CDU நாடாளுமன்ற உறுப்பினர் Felix Schreiner இதை ஒரு “compromise” எனக் குறிப்பிட்டுள்ளார். காரணம், முன்னதாக ஜெர்மன் நிதி அமைச்சகம் இந்த வரம்பை €175 வரை உயர்த்தும் யோசனையையும் முன்வைத்திருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது €50 விதியை வைத்திருப்பது எல்லை வர்த்தகத்திற்கு சற்றே சாதகமான முடிவாக பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், ஜெர்மனியில் digitaler Ausfuhrkassenzettel – dAKZ எனப்படும் புதிய டிஜிட்டல் export certificate முறை சோதனை செய்யப்பட்டு வருகிறது. இந்த app மூலம் shoppers தங்கள் ரசீதுகளை டிஜிட்டலாக சேமித்து, எல்லையில் physical customs stamp காத்திருக்காமல் VAT refund பெறும் வழி உருவாகிறது.

இந்த டிஜிட்டல் முறை நாடு முழுவதும் விரைவில் நடைமுறைக்கு வந்தால், €50 குறைந்தபட்ச விதி 2028க்கு முன்பே நீக்கப்படும் வாய்ப்பும் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது இது pilot phase-ல் உள்ளது; Lidl உள்ளிட்ட சில கடைகள் இந்த சோதனையில் பங்கேற்றுள்ளன.

சுவிஸ் shopping tourism ஜெர்மன் எல்லை நகரங்களுக்கு பெரிய வருமானமாக உள்ளது. தென் Baden-Württemberg பகுதியில் மட்டும் சுவிட்சர்லாந்திலிருந்து வரும் shoppers ஆண்டுக்கு சுமார் €2.5 billion செலவிடுகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவிஸ் உளவுத்துறையில் புதிய அத்தியாயம்:

2027 முதல் நான்கு பிரிவுகளுடன் புதிய நிர்வாகம்!



பேர்ன்: சுவிட்சர்லாந்தின் மத்திய உளவுத்துறையான Nachrichtendienst des Bundes – NDB, தனது மறுசீரமைப்பின் கீழ் புதிய தலைமை நிர்வாகத்தை அறிவித்துள்ளது. தற்போது ஆறு நிர்வாகப் பிரிவுகளுடன் இயங்கும் இத்துறை, 2027 முதல் நான்கு பிரிவுகளுடன் செயற்படவுள்ளது.

NDB இயக்குநர் Serge Bavaud, நவம்பர் 13ஆம் திகதி பேர்னில் புதிய தலைமை அமைப்பை அறிமுகப்படுத்தினார். நிர்வாக வழிநடத்தலை வலுப்படுத்துதல், முடிவெடுக்கும் நடைமுறைகளை விரைவுபடுத்துதல் மற்றும் உளவுத்துறையின் பிரதான பணிகளில் கவனத்தை அதிகரித்தல் ஆகியவை இந்த மாற்றத்தின் நோக்கங்களாகும்.

புதிய அமைப்பில், Pascal Porchet, துணை இயக்குநராகவும் Governance பிரிவின் தலைவராகவும் பொறுப்பேற்கிறார். Graubünden கன்டோனின் இராணுவம் மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு அலுவலகத்தை முன்னர் வழிநடத்திய இவர், 2027 ஜனவரி 1ஆம் திகதி புதிய பதவியை ஏற்கவுள்ளார். அவரது நியமனத்தை மத்திய பாதுகாப்புத் துறைத் தலைவர் Martin Pfister மேற்கொண்டுள்ளார்.

நடவடிக்கைகள் பிரிவை Roger Thommen மற்றும் Christian Sigrist இணைந்து வழிநடத்தவுள்ளனர். இருவரும் ஏற்கெனவே NDBயில் நீண்டகால அனுபவமுள்ள துணை இயக்குநர்களாவர். வளங்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவின் தலைவராக Christian Strehler பொறுப்பேற்கிறார்.

மத்திய காவல்துறையான Fedpol நிறுவனத்தின் துணை இயக்குநர் Emre Ertan, NDBயின் தொழில்நுட்பம் மற்றும் திறன்கள் – Technologie und Fähigkeiten பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2027 பெப்ரவரி 1ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ளார். காவல்துறைத் தகவல் அமைப்புகள், உயிரளவியல் அடையாளமறிதல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத் திட்டங்களில் அவருக்கு அனுபவம் உள்ளது.

இந்த மறுசீரமைப்பு 2026 இறுதிக்குள் நிறைவடையும் என்றும், பொறுப்புகள் ஒப்படைக்கப்படும் வரை தற்போதைய நிர்வாகிகள் தமது பணிகளைத் தொடர்வார்கள் என்றும் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி முடித்தவர்களுக்கு மாதம் குறைந்தது CHF 5,000:

சுவிஸ் தொழிற்சங்கங்கள் மக்கள் முன்முயற்சிக்குத் தயாராகின்றன!



பேர்ன்: சுவிட்சர்லாந்தில் தொழிற்பயிற்சியான Berufslehre முடித்து முழுநேரமாகப் பணியாற்றுவோருக்கு, மாதாந்தம் குறைந்தது CHF 5,000 சம்பளம் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் மக்கள் முன்முயற்சியைத் தயாரிக்க, சுவிஸ் தொழிற்சங்கக் கூட்டமைப்பான Schweizerischer Gewerkschaftsbund – SGB முடிவெடுத்துள்ளது.

நவம்பர் 13ஆம் திகதி பேர்னில் நடைபெற்ற மாநாட்டில், இதற்கான முன்முயற்சி உரையைத் தயாரிக்குமாறு SGB நிர்வாக அமைப்புகளுக்குப் பிரதிநிதிகள் பெரும்பான்மை ஆதரவுடன் பணிப்புரை வழங்கினர்.

தொழிற்பயிற்சியை முடித்த பின்னரும், வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்கப் போதுமான சம்பளம் பலருக்குக் கிடைப்பதில்லை என SGB தெரிவிக்கிறது. அதன் கணக்கீட்டின்படி, முழுநேரப் பணிக்கு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொழிற்பயிற்சி முடித்தவர்களில் பத்தில் சுமார் மூவர் மாதம் CHF 5,000க்கும் குறைவாகவே சம்பாதிக்கின்றனர். குறிப்பாகப் பெண்கள் குறைந்த சம்பளத்தால் அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

பயிற்சியாளர்களுக்கு எட்டு வார விடுமுறையும் பரிசீலனை

தொழிற்பயிற்சியில் ஈடுபடும் Lernende இளைஞர்களுக்கு ஆண்டுக்கு எட்டு வார விடுமுறை வழங்கும் கோரிக்கையையும் இதே முன்முயற்சியில் இணைக்க முடியுமா என்பது ஆராயப்படவுள்ளது. நிறுவனப் பயிற்சிக்கும் தொழிற்கல்விப் பாடசாலைக்கும் இடையிலான பணிச்சுமைக்கு மத்தியில் போதுமான ஓய்வு அவசியம் என SGB வலியுறுத்துகிறது.

முன்முயற்சியை அதிகாரப்பூர்வமாக எப்போது தொடங்குவது என்பதை SGB நிர்வாக அமைப்புகள் தீர்மானிக்கவுள்ளன. CHF 5,000 சம்பளமும் எட்டு வார விடுமுறையும் தற்போது நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதக்கூடாது



சுவிஸ் 2027 வரவுசெலவுத் திட்டத்திற்கு நிதிக்குழு எதிர்ப்பு:

குளிர்காலக் கூட்டத்தொடரில் முக்கிய விவாதம்!

பேர்ன்: சுவிட்சர்லாந்தின் 2027ஆம் ஆண்டுக்கான மத்திய வரவுசெலவுத் திட்டத்தை நிராகரிக்குமாறு, தேசிய சபையின் நிதிக்குழுவான Finanzkommission des Nationalrates – FK-N பரிந்துரைத்துள்ளது.

குழுவின் ஒட்டுமொத்த வாக்கெடுப்பில், 15 பேர் எதிராகவும் 9 பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். ஒருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. நவம்பர் 12ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில் இந்த முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட திருத்தங்கள் குறித்து ஆலோசனை

பல வாரங்களாக நடைபெற்ற ஆரம்ப ஆய்வுகளையும், மூன்று நாள் விரிவான ஆலோசனைகளையும் தொடர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட திருத்த முன்மொழிவுகளை நிதிக்குழு பரிசீலித்தது.

திருத்தங்களுக்குப் பின்னர், கடன் கட்டுப்பாட்டு விதியான Schuldenbremse அடிப்படையில் கணக்கிடப்படும் கட்டமைப்பு உபரி CHF 219.4 மில்லியனாக இருந்தது. இதனால் கடன் கட்டுப்பாட்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டபோதும், ஒட்டுமொத்தத் திட்டத்திற்குக் குழுவில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை.

அடுத்து என்ன நடக்கும்?

2027 வரவுசெலவுத் திட்டம், எதிர்வரும் குளிர்காலக் கூட்டத்தொடரில் தேசிய சபை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளிலும் விவாதிக்கப்படவுள்ளது. நிதிக்குழு ஏற்றுக்கொண்ட திருத்தங்களும் சிறுபான்மை முன்மொழிவுகளும் அந்த விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

அரசிடம் திட்டத்தை மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்புவதற்கு, இரு அவைகளும் அதனை நிராகரிக்க வேண்டும் அல்லது ஓர் அவை இருமுறை நிராகரிக்க வேண்டும்.

எனவே, நிதிக்குழுவின் எதிர்ப்பால் மட்டும் 2027 மத்திய வரவுசெலவுத் திட்டம் இறுதியாக நிராகரிக்கப்பட்டுவிட்டதாகக் கருத முடியாது. அடுத்த கட்ட முடிவு நாடாளுமன்ற விவாதத்தைப் பொறுத்துள்ளது.



வேலை முடிந்தும் ஓய்வில்லையா?

சுவிஸ் வாழ்க்கையில் நமக்கான நேரம் எங்கே?

வேலை முடிந்து வீட்டுக்குள் நுழைகிறோம். காலணிகளைக் கழற்றுவதற்குள் கைப்பேசியில் ஒரு செய்தி. பிள்ளையின் பாடசாலையிலிருந்து வந்த அறிவிப்பைப் பார்க்க வேண்டும். கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். நாளைய உணவைத் தயாரிக்க வேண்டும். ஊரிலுள்ள உறவினருடன் பேச வேண்டும். வார இறுதி நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டும்.

“இன்று கொஞ்சம் ஓய்வெடுக்க வேண்டும்” என்று காலையில் நினைத்திருந்தோம். ஆனால் இரவு படுக்கைக்குச் செல்லும்போதுதான் நினைவுக்கு வருகிறது – இன்று நமக்காக நேரமே ஒதுக்கவில்லை.

சுவிட்சர்லாந்தில் வாழும் நம்மில் பலருக்கும் இப்படியான நாட்கள் இருக்கலாம். வேலை செய்யும் இடத்திலிருந்து வெளியேறிவிட்டாலும், செய்ய வேண்டியவற்றின் பட்டியலிலிருந்து வெளியேற முடியாமல் இருக்கிறோம்.

குடும்பத்திற்காக உழைக்கும் வாழ்க்கை

புலம்பெயர் வாழ்க்கையில் வேலை என்பது மாதச் சம்பளத்துடன் முடிந்துவிடுவதில்லை. வீட்டுவாடகை, மருத்துவக் காப்புறுதி, பிள்ளைகளின் கல்வி, குடும்பத்தின் எதிர்காலம், தாயகத்திலுள்ள உறவுகளுக்கான உதவி எனப் பல பொறுப்புகள் அதனுடன் இணைந்திருக்கின்றன.

“எங்களைவிட எங்கள் பிள்ளைகள் நன்றாக வாழ வேண்டும்” என்ற எண்ணம் பல பெற்றோரின் உழைப்புக்கு வலிமை சேர்க்கிறது. அவர்களது தியாகங்களை எளிதாகக் கடந்துவிட முடியாது.

அதேவேளை, குடும்பத்திற்காக உழைக்கும் இந்தப் பயணத்தில், குடும்பத்துடன் அமைதியாக இருப்பதற்கான நேரமும் தேவைப்படுகிறது. பிள்ளையுடன் அவசரமின்றிப் பேசுவதற்கும், துணையுடன் ஒரு தேநீர் அருந்துவதற்கும், பெற்றோரின் கதையைக் குறுக்கிடாமல் கேட்பதற்கும் நேரம் வேண்டும்.

அந்த நேரத்தை “பிறகு பார்த்துக்கொள்ளலாம்” என்று தொடர்ந்து ஒத்திவைத்தால், அதை மீண்டும் பெறுவது எளிதாக இருக்காது.

விடுமுறைக்கும் ஒரு வேலைப்பட்டியல்

வார இறுதி வந்தால் ஓய்வு கிடைக்கும் என்று நினைக்கிறோம். ஆனால் சனிக்கிழமையின்

பட்டியல் வெள்ளிக்கிழமையே தயாராகிவிடுகிறது.

வீட்டுச் சுத்தம், பொருட்கள் வாங்குதல், பிள்ளைகளின் வகுப்புகள், உறவினர் சந்திப்பு, சமூக நிகழ்ச்சி, முடிக்கப்படாத நிர்வாகப் பணிகள் – ஒவ்வொன்றும் அவசியமானதாகத் தோன்றுகிறது.

தமிழ் மொழி, கலை, விளையாட்டு, சமூக உறவுகள் ஆகியவற்றுடன் பிள்ளைகளை இணைத்து வளர்க்கும் முயற்சிகள் மதிப்புமிக்கவை. ஆனால் குடும்பத்தின் ஒவ்வொரு மணிநேரத்தையும் நிரப்பும்போது, பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் சும்மா இருப்பதற்கான இடம் குறைந்துவிடுகிறது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை எந்தத் திட்டமும் இல்லாமல் இருப்பதை நம்மால் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள முடிகிறதா? அல்லது "நேரத்தை வீணாக்குகிறோமோ?" என்ற எண்ணம் உடனே வந்துவிடுகிறதா?

ஓய்வுக்கும் குற்றவுணர்வு ஏன்?

சில நேரங்களில் உட்கார்ந்திருப்பதே சங்கடமாக இருக்கிறது. வீட்டில் இன்னும் ஏதாவது செய்ய வேண்டியிருக்கும்போது ஓய்வெடுக்கலாமா என்று தோன்றுகிறது.

ஆனால் வீட்டுப் பணிகளுக்கு ஒரு முடிவு வருவது அரிது. இன்று முடித்தாலும் நாளை மீண்டும் தொடங்கும். எல்லாவற்றையும் முடித்த பின்னர்தான் ஓய்வு என்று வைத்துக்கொண்டால், ஓய்வுக்கான நேரம் தொடர்ந்து தள்ளிப்போகும்.

கைப்பேசியும் அந்த இடைவெளியை நிரப்பிவிடுகிறது. சில நிமிடங்கள் பார்க்கத் தொடங்குகிறோம்; நேரம் கடந்துவிடுகிறது. வேலைக்கான செய்தி, குடும்பக் குழு, சமூக நிகழ்வு அறிவிப்பு என மனம் மீண்டும் பல திசைகளில் செல்லத் தொடங்குகிறது.

ஓய்வு கிடைத்த நேரத்தில்கூட எதற்காவது பதிலளிக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

வீட்டில் யாருக்கு ஓய்வு கிடைக்கிறது?

ஒரு குடும்பத்தில் அனைவரும் சோர்வடையலாம். ஆனால் அனைவருக்கும் சமமாக ஓய்வு கிடைக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஒருவர் வேலையிலிருந்து வந்து அமரும்போது, மற்றவர் சமையலறையில் இரண்டாவது வேலைநேரத்தைத் தொடங்கக்கூடும். உணவு தயாரிப்பதுடன், எது தீர்ந்துவிட்டது, பிள்ளைக்கு நாளை என்ன தேவை, எந்தக் கட்டணத்தின் கடைசித் தேதி நெருங்குகிறது என்பதையும் ஒருவரே நினைவில் வைத்திருக்கக்கூடும்.

"உதவி வேண்டுமென்றால் சொல்" என்று கூறுவதுடன் நிறுத்தாமல், பொறுப்புகளைத் தாமாக ஏற்றுக்கொள்வது குடும்பத்திற்குள் ஓய்வுக்கான இடத்தை உருவாக்கும்.

பாத்திரங்களைக் கழுவுவது, பிள்ளைகளின் தேவைகளைக் கவனிப்பது, சந்தைப் பொருட்களை வாங்குவது போன்ற பணிகளைப் பகிர்ந்துகொள்ளும்போது, ஒருவரின் நேரத்தை மற்றவரும் மதிக்கிறோம்.

"இந்த முறை முடியாது" என்று சொல்லலாம்

உறவுகளையும் சமூகத் தொடர்புகளையும் பேணுவது நமது வாழ்க்கையின் முக்கியமான பகுதி. இருந்தாலும் ஒவ்வொரு அழைப்பையும் ஏற்றுக்கொள்வது எல்லா நேரங்களிலும் சாத்தியமில்லை.

"இந்த வாரம் எங்களுக்குக் குடும்ப நேரம் தேவை."

"இன்று ஓய்வெடுக்கிறேன்; நாளை பேசுவோம்."

"இந்தப் பொறுப்பை இப்போது என்னால் ஏற்க முடியாது." இப்படிச் சொல்லும்போது நீண்ட விளக்கம் தர வேண்டிய கட்டாயம் இருக்கக்கூடாது. மற்றவர்கள் அவ்வாறு கூறும்போதும் அதை மரியாதையுடன் ஏற்றுக்கொள்ளப் பழகலாம்.

நமது நேரத்தின் எல்லைகளைப் புரிந்துகொள்வது, ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை அக்கறையுடன் செய்வதற்கும் உதவும்.

சிறிய இடைவெளிகளுக்கும் இடம் கொடுப்போம்

எல்லோராலும் வேலை நேரத்தைக் குறைக்க முடியாது. செலவுகளையோ குடும்பப் பொறுப்புகளையோ உடனடியாக மாற்றவும் முடியாது. இதனால் ஓய்வு என்பது தனிநபரின் திட்டமிடலால் மட்டுமே தீர்க்கக்கூடிய விடயம் என்று கூறிவிட முடியாது.

இருப்பினும், நமக்குச் சாத்தியமான இடங்களில் சிறிது இடைவெளி உருவாக்கலாம். ஒன்றாக உணவருந்தும்போது கைப்பேசியை ஒதுக்கிவைப்பது, வீட்டுப் பணிகளைப் பகிர்வது, வார இறுதியில் ஒரு பகுதியைத் திட்டமிடாமல் விடுவது போன்ற சிறிய மாற்றங்களிலிருந்து தொடங்கலாம்.

அந்த நேரத்தில் பயனுள்ள ஒன்றைச் செய்தாக வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஜன்னலோரம் அமர்ந்து தேநீர் அருந்தலாம். பிள்ளையின் பேச்சைக் கேட்கலாம். அமைதியாக இருக்கலாம். நாம் உழைத்து உருவாக்க விரும்பும் நல்ல வாழ்க்கையில், இத்தகைய தருணங்களுக்கும் இடமிருக்க வேண்டும்.

இன்றிரவு வீட்டில் ஒருவரிடம் கேட்டுப் பார்ப்போம்:

"நாளைக்கு என்ன செய்ய வேண்டும்?" என்பதோடு, "இன்று உனக்கு ஓய்வெடுக்க நேரம் கிடைத்ததா?" என்றும்.



சுவிஸ் ரயிலுக்குள் ரக்லெட் தயாரித்த விளம்பரம்: பயணிகளுக்கு ஆபத்து என SOB எச்சரிக்கை!

சுவிட்சர்லாந்தில் ஓடும் ரயிலுக்குள் மின்சாரச் சாதனத்தைப் பயன்படுத்தி ரக்லெட் (Raclette) தயாரித்த விளம்பர வீடியோ, பாதுகாப்புக் குறித்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


சமூக ஊடக உள்ளடக்கத் தயாரிப்பாளர் Emanuel Sarbach, Zyliss நிறுவனத்தின் சாதனத்தை விளம்பரப்படுத்துவதற்காக Südostbahn (SOB) ரயிலில் சீஸை உருக்கி ரக்லெட் தயாரித்துள்ளார். இந்தப் படப்பிடிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும், வீடியோ வெளியான பின்னரே அதுகுறித்துத் தெரியவந்ததாகவும் ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரயில் திடீரென நிறுத்தப்பட்டால், சூடான சாதனமும் உருகிய சீஸும் சிதறி அருகிலுள்ள பயணிகளுக்குத் தீக்காயங்களை ஏற்படுத்தக்கூடும் என SOB எச்சரித்துள்ளது. மேலும், பயணிகளுக்கான மின் இணைப்புகள் கைப்பேசி போன்ற சாதனங்களைச் சார்ஜ் செய்வதற்கானவை என்றும், சமையல் சாதனங்களை இயக்குவதால் மின்சாரப் பாதுகாப்பு உருகிகள் செயலிழக்கக்கூடும் என்றும் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எழுத்துமூல அனுமதி பெறாததற்காக Zyliss நிறுவனமும் அதன் விளம்பர முகவரகமான Offroad நிறுவனமும் மன்னிப்புக் கோரியுள்ளன. படப்பிடிப்பின்போது சாதனத்தைக் கண்காணிப்பதற்காக ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டிருந்ததாகவும் அவை தெரிவித்துள்ளன.

நூல் அறிமுகம்





வெற்றிச்செல்வி அவர்களின்
“தீபகச்செல்வன்”

எழுத்தாளர் **சயந்தன்** உரை





விவேகானந்தனூர் சதீஸ் அவர்களின்
“துருவேறும் கைவிலங்கு”

மூத்த ஊடகவியலாளர் **கனகரவி** உரை

நாள் : 13.12.2026 ஞாயிறு

நேரம் : 10 மணி தொடக்கம் மாலை 15:00 வரை.
(மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது)

இடம் : தமிழர் களரி ஆவணக் காப்பகம்.
Europaplatz 1b,
3008 Bern, Swiss.

கேள்வி பதில் நேரம்.

16 ஆண்டுகள் சதீஸ் அவர்களின் சிறை அனுபவம் சார்ந்து கேள்வி பதில் நிகழ்வு இறுதி நிகழ்வாக இடம்பெறும்.

தொடர்புகட்கு :
கரன் : +41 76 309 51 05
ஜெராட் : +41 79 550 85 55
வவி : +41 76 492 90 34

அரங்கு ஒருங்கிணைப்பாளர்கள் :
ஜனனி, இணுவையூர் மயூரன்



சூரிச்சில் கட்டிட அனுமதி நடைமுறை எளிதாகிறது:

2027 மார்ச் முதல் புதிய விதிகள்!

சூரிச் கன்டோனில் குளிரூட்டிகள் பொருத்துதல் மற்றும் சிறிய கட்டுமானப் பணிகளுக்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்குக் கன்டோன் அரசு தீர்மானித்துள்ளது. 2027 மார்ச் முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும் இந்த மாற்றங்கள் குறித்து நவம்பர் 12ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஏற்கெனவே உள்ள கட்டிடங்களில் குளிரூட்டிகளைப் பொருத்துவதற்குப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வழக்கமான கட்டிட அனுமதி நடைமுறைக்குப் பதிலாக, விரைவான அறிவிப்பு நடைமுறை – Melde-verfahren பயன்படுத்தப்படவுள்ளது.

எனினும், இரைச்சல் பாதுகாப்பு உள்ளிட்ட விதிமுறைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவற்றைப் பூர்த்திசெய்வதில் சந்தேகம் ஏற்பட்டால், வழக்கமான அனுமதி நடைமுறைக்கு மாற்றுமாறு கட்டிட அதிகாரிகள் உத்தரவிடலாம்.

எளிய தோட்ட நிழற்பந்தல்கள் எனப்படும் பெர்கோலாக்கள், தோட்ட ஊஞ்சல் அமைப்புகள், சறுக்கிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஏனைய விளையாட்டு உபகரணங்களுக்குக் கட்டிட அனுமதியிலிருந்து விலக்கு வழங்கப்படுகிறது.

உணவகங்களும் வெளிப்புற இருக்கைகளை விரிவுபடுத்த அறிவிப்பு நடைமுறையைப் பயன்படுத்தலாம். இதன்கீழ், ஏற்கெனவே உள்ள வெளிப்புற இருக்கைகளின் எண்ணிக்கையை ஒருமுறை அதிகபட்சம் மூன்றில் ஒரு பங்கால் அதிகரிக்கலாம். சிறிய உணவகங்கள் மொத்தம் பத்து வெளிப்புற இருக்கைகள்வரை விரிவுபடுத்தலாம்.

சொத்து உரிமையாளர்களும் உணவக நிர்வாகிகளும், பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர் தமது நகராட்சி அல்லது உள்ளூராட்சி கட்டிடப் பிரிவுடன் தொடர்புகொண்டு, பொருந்தும் நடைமுறையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.



வரலாற்றில் தியாகத்தை உணர்த்தும் உலகப் போர் நினைவுச் சின்னங்கள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

(உலக நாடுகளின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் ஒவ்வொரு நாடும் தனது தேசத்து உயிர்த் தியாகிகளை தேச புருசர்களாகப் போற்றி தேசிய தினம் கொண்டாடுகின்றது. உலகின் எந்தத் தேசத்தை எடுத்து நோக்கினாலும் போர் நினைவுச் சின்னங்கள், மாவீரர் துயிலகங்கள் தேசச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வருகின்றன)

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட உலகின் மிகவும் அடையாளம் காணக்கூடிய நினைவுச் சின்னங்களின் பின்னணியில் உள்ள வரலாற்றை நாங்கள் ஆராய்ந்து பார்த்தால் மானுட தியாகத்தின் உச்சத்தை நாம் அறியலாம். தியாக வரலாற்றினை உணர்த்தும் இந்த போர் நினைவுச் சின்னங்கள் உலகின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன.



உலக நாடுகளின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் ஒவ்வொரு நாடும் தனது தேசத்து உயிர்த் தியாகிகளை தேச புருசர்களாகப் போற்றி தேசிய தினம் கொண்டாடுகின்றது.

உலகின் எந்தத் தேசத்தை எடுத்து நோக்கினாலும் போர் நினைவுச் சின்னங்கள், மாவீரர் துயிலகங்கள் தேசச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்டாலின்கிராட்: தாய்நாடு அழைக்கிறது

ரஷ்யாவில் மிகவும் அடையாளம் காணக்கூடிய நினைவுச்சின்னங்களில் ஒன்று, உலகில் எங்கும் இல்லாத, 'தாய்நாடு அழைக்கிறது'- நம்பமுடியாத 91 மீட்டர் உயரத்தில் கம்பீரமாக நிற்கிறது, இது ஸ்டாலின்கிராட் போரின் நினைவாக ரஷ்யாவின் வோல்கோகிராட்டில் உள்ள மாமேவ் குர்கானில் அமைந்துள்ளது.

தாய்நாடு அழைக்கிறது நினைவுச் சின்னத்தை சிற்பி யெவ்ஜெனி வுச்செடிச் மற்றும் கட்டமைப்பு பொறியாளர் நிகோலாய் நிகிடின் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டில், இது உலகின் மிகப்பெரிய சிலையாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று உலகிலேயே மிகப் பெரிய பெண் சிலையும் இதுவாகும்.

அரிசோனா நினைவுச்சின்னம் ஹவாய் ஹொனலுலுவில் உள்ள பேர்ல் துறைமுகத்தில் அமைந்துள்ளது. பேர்ல் துறைமுகத்தின் மீதான தாக்குதலின் போது USS அரிசோனா கப்பலில் உயிரிழந்த 1,177 மாலுமிகள் மற்றும் கடற்படையினரில் 1,102 பேர் நிரந்தர ஓய்வெடுக்கும் இடத்தை இது குறிக்கிறது.

1962 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த நினைவிடத்தை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான



மக்கள் பார்வையிடுகின்றனர். கப்பலின் மூழ்கிய எச்சங்கள் மே 5, 1989 அன்று தேசிய வரலாற்று அடையாளமாக அறிவிக்கப்பட்டது. பார்வையாளர்கள் அரிசோனாவை கடலுக்கு அடியில் கிடப்பதைப் போல பார்க்க முடியும்.

இரண்டாம் உலகப் போரின் பெண்களுக்கான நினைவுச்சின்னம் லண்டனில் உள்ள வைட்ஹாலில் அமைந்துள்ள ஒரு பிரிட்டிஷ் தேசிய போர் நினைவுச்சின்னமாகும்.

இந்த நினைவுச்சின்னம், ஜான் என்பவரால் செதுக்கப்பட்டது. W. மில்ஸ், ராணி எலிசபெத் II ஆல் திறக்கப்பட்ட ஜூலை 2005 இல் பரோனஸ் பூத்ராய்டால் நிர்மாணிக்கப் பட்டது. இது 22 அடி (6.7 மீ) உயரத்தில் உள்ளது. அதன் பக்கத்திலுள்ள எழுத்துகள் போர்க்கால புத்தகங்களில் பயன்படுத்தப்பட்ட எழுத்துருவைப் பிரதிபலிக்கிறது.

சிற்பத்தில் உள்ள 17 விதமான ஆடைகள், போரின் போது பெண்கள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு வேலைகளைச் செய்ததைக் குறிக்கிறது. இந்த இரண்டாம் உலகப் போரின் பெண்களுக்கான நினைவுச்சின்னம் லண்டனில் உள்ள வைட்ஹாலில் அமைந்துள்ளது.

போலந்து தேசிய நினைவு அமைவகம் :

150 ஏக்கர் காடுகளை உள்ளடக்கியதுடன் முதலாம் உலகப் போர் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் பிற மோதல்களில் வீழ்ந்த ராணுவ வீரர்கள் மற்றும் பெண்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் இங்கிலாந்தின் ஸ்டாஃபோர்ட்ஷையரில் உள்ள லிச்ஃபீல்ட் அருகே அமைந்துள்ளது.

நேச நாட்டுப் படைகளின் ஒரு பகுதியாக நீண்டகாலமாக சேவை செய்து போரில் உயிர் இழந்தவர்க்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவுச்சின்னம் ஆக உருவாக்கம் பெற்றுள்ளது.

இந்த நினைவுச்சின்னங்கள் நான்கு வெண்கல வர்ணம் பூசப்பட்ட பொம்மை வீரர்களிடமிருந்து வந்தது போல் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை டாக்டர் ஆண்ட்ரெஜ் மீசன் கிலானோவ்ஸ்கியால் உருவாக்கப்பட்டது.

இந்த நினைவுச்சின்னம் போலந்து ஆயுதப் படைகளின் நான்கு கிளைகளை அடிப்படையாகக் கொண்டது: விமானப்படை, இராணுவம், கடற்படை மற்றும் போலந்து துணைப்படையை நினைவுகூரும்

வகையில் கட்டப்பட்டது. இந்த போலந்து போர் நினைவுச்சின்னத்திற்கான வடிவமைப்பு நிறுவியவர் ஆர். சோபோசின்ஸ்கி

அலோய்ஷா நினைவு சின்னம், பல்கேரியா

அலோய்ஷா என்பது 11 மீட்டர் உயரமுள்ள ஒரு சோவியத் சிப்பாயின் உறுதியான வலுவூட்டப்பட்ட கான்கிரீட் சிலை ஆகும். இது 1943-1946இல் பல்கேரியாவின் விடுதலையின் போது சோவியத் உயிரிழப்புகளை நினைவுகூரும் வகையில் கட்டப்பட்டது. ஆயினும் ப்லோவ்டிவ் அதிகாரிகள் 1989 இல் சிலையை அகற்ற முயன்றனர். பின்னர் மீண்டும் 1996 இல், மீண்டும் முயற்சிக்க நிரந்தர பாதுகாப்புக்கு வழிவகுத்தது. சிலை உடைக்கப்படாமல் இருக்க காவலர்கள் இரவு பகலாக சிலை அருகே நின்றனர். இச்சிலையை உக்ரேனிய முன்னணியின் சிப்பாய் அலியோஷா ஸ்கர்லடோவ் இந்த சிலையை அமைக்க உத்வேகமாக பணியாற்றினார்.

இரண்டாம் உலகப் போரின் மற்றொரு சின்னமான கடல் வீரர்களின் போர் நினைவுச்சின்னம் (மரைன் கார்ப்ஸ் வார் மெமோரியல்) தி ஐவோ ஜிமா நினைவுச்சின்னம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆர்லிங்டன் ரிட்ஜ் பூங்கா, ஆர்லிங்டன், வர்ஜீனியாவில் உள்ள ஆர்லிங்டன் தேசிய கல்லறையின் நுழைவாயிலில் அமைந்துள்ளது. இந்த நினைவுச்சின்னம் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கட்டப்பட்டது, மேலும் 1775 முதல் அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக இறந்த அமெரிக்காவின் கடல் வீரர்களுக்காக



அர்ப்பணிக்கப்பட்டது.

ஐவோ ஜிமா போரின் போது பிப்ரவரி 23, 1945 இல் சூரிபாச்சி மலையில் பெரிய அமெரிக்கக் கொடியை உயர்த்திய ஆறு படைவீரர்களை இந்த சிலை கொண்டுள்ளது.

பிரான்சின் நாடுகடத்தப்பட்டவரின் நினைவுச் சின்னம் ;

இந்த நினைவுச் சின்னம் இரண்டாம் உலகப் போரின்போது பிரான்சிலிருந்து நாஜி வதை முகாம்களுக்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மெமோரியல் டெஸ் மார்டியர்ஸ் டி லா டிபோர்ட்டேஷன் (நாடுகடத்தப்பட்டவரின்

நினைவுச்சின்னம்) என்பது பிரான்சின் பாரிஸில் உள்ள ஒரு நினைவுச்சின்னமாகும். இது Île de la Cité இல் உள்ள நோட்ரே டேமின் பின்னால் அமைந்துள்ளது.

பிரெஞ்சு நவீன கட்டிடக் கலைஞர் ஜார்ஜஸ்-ஹென்றி பிங்குசன் என்பவரால் இந்த நினைவுச் சின்னம் வடிவமைக்கப்பட்டது. 1962 இல் சார்லஸ் டி கோல் என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. கப்பலின் முனை



போன்ற வடிவில், இரண்டு படிக்கட்டுகள் மற்றும் ஒரு தாழ்வான சதுரம் ஆகியவை நினைவுச்சின்னத்தை அணுக அனு மதிக்கின்றன. இதனுள் இரண்டு தேவாலயங்கள் உட்பட ஒரு அறுகோண பார்வைக்கை வழிவகுக்கிறது. அதன் சுவர்களில் பல வரலாற்று இலக்கியப் பகுதிகள் பொறியப்பட்டு உள்ளன.

பிரான்சின் அறியப்படாத நாடுக டத்தப்பட்டவரின் கல்லறையானது, நாஜிகளின் கீழ் பிரான்சில் இருந்து நாடு கடத்தப்பட்ட 200,000 மக்களைக் குறிக்கும் நினைவுச் சின்னம் ஆகும்.

டான்பாஸ்
விடுதலையாளர்களுக்கான
நினைவுச்சின்னம்:

இரண்டாம் உலகப் போரின் போது ரஷ்யாவின் டான்பாஸை விடுவித்த அனைத்து இராணுவ பிரிவுகளுக்கும் அமைப்புகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் (டான்பாஸ் லிபரேட்டர்ஸ்) டோனெட்ஸ்கில் உள்ள லெனின் காம்சோமால் பூங்காவில் அமைந்துள்ளது.

இவ் நினைவுச்சின்னம் ஒரு முக்கோண வடிவில் உள்ளது. இது மூன்று சாய்ந்த சுவர்களின் குழுவானது தரையில் இருந்து வெளியே வரும் டொனெட்ஸ்க் டெரிகோன்களின் நிழற்படங்களை அவற்றின் கூர்மையான விளிம்புகளால் அடையாளப்படுத்துகிறது. நினை வுச்சின்னத்தின் அடிவாரத்தில் ஒரு "நித்திய சுடர்" அமைந்துள்ளது.

டான்பாஸ் விடுதலையாளர்களுக்கான நினைவுச்சின்ன மேடையில் ஒரு சுரங்கத் தொழிலாளி மற்றும் சிப்பாய்களின் சிற்பம் உள்ளது. அவர்கள் ஒரு வாளை, அதன் விளிம்பைக் கீழே, தங்கள் வலது கைகளில் பிடிக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் ஐந்து புள்ளிகள் கொண்ட நட்சத்திரத்தின் வடிவம் உள்ளது. நினைவு நாள் நிகழ்வுகளின் போது, வீரர்கள் நினைவுச்சின்னத்திற்கு நகரத்தி ன் வழியாக அணிவகுத்துச் செல்வர்.

உலகப் போர் முடிந்து 75 ஆண்டுகள் கட ந்து விட்டன. உலகம் முழுவதும் நூ ற்றுக்கணக்கான போர் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டு, அவர்களின் தியாகங்கள் நினைவு கூரப்பட்டுவரு கின்றன. அவற்றில்

கனடா மற்றும் பிரித்தானியாவில் கார்த்திகை பிறந்தால் அம் மக்கள் 'பொப்பி எனும் பூ அணிந்து தமது வாழ்வுக்காகப் போரில் உயிர்நீத்த தமது போர்வீரர்களை நினைவுகூர்வதைக் காணலாம்.

அதுபோல பிரான்சில் பிரெஞ்சுப் புரட்சியின் நினைவு ஆடி 14ஆம் நாள் தேசிய தினமாக மக்கள் பெருவிழாவாக சிறப்பிக்கப்படுகிறது.



செவிக்கருவிகளுக்கான IV/AHV உதவித்தொகை உயர்வு:

2027 ஜனவரி முதல் அமுல்!

சுவிட்சர்லாந்தில் செவிக்கருவிகளைப் பெறுவதற்காக வழங்கப்படும் IV மற்றும் AHV நிதியுதவிகள், 2027 ஜனவரி முதலாம் திகதி முதல் உயர்த்தப்படுகின்றன. Zürich உட்பட நாடு முழுவதும் தகுதியுடையவர்களுக்குப் பொருந்தும் இந்த மாற்றத்தை, மத்திய அரசு நவம்பர் 12ஆம் திகதி அறிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான காப்புறுதியான IV, முதியோர் மற்றும் தப்பிப்பிழைத்தோருக்கான காப்புறுதியான AHV ஆகியவற்றின் கீழ், பெரியவர்களுக்கு வழங்கப்படும் தொகைகள் பின்வருமாறு மாற்றப்படுகின்றன:

அடிப்படை உதவித்தொகைகள் 10 சதவீதத்தால் உயர்த்தப்படுகின்றன. புதிய IV தொகைகளில், மின்கலச் செலவுக்காக ஒரு காதுக்கு CHF 150, இரு காதுகளுக்கு CHF 300 என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன. AHV தொகைகளில் மின்கலக் கொடுப்பனவு கிடையாது.

இதனால், புதிய விதிகளின்படி செவிக்கருவி பெறும் பெரியவர்களுக்கு வருடாந்த மின்கலக் கொடுப்பனவு தனியாக வழங்கப்படாது. எனினும், 2026 டிசம்பர் 31 வரை பழைய விதிகளின்படி உதவி பெற்றவர்கள், அடுத்த புதிய செவிக்கருவி பெறும்வரை பழைய மின்கலக் கொடுப்பனவைக் கோர முடியும்.

குழந்தைகளுக்கான உதவித்தொகை உச்சவரம்புகளும் உயர்த்தப்படுகின்றன. குறிப்பாக, எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அதிகமான உச்சவரம்பு அறிமுகப்படுத்தப்படுகிறது.

வாசகர்கள் கவனத்திற்கு: புதிய செவிக்கருவி பெறுவதற்கு முன்னர், தங்களுக்கான தகுதி, பொருந்தும் உதவித்தொகை மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைச் சம்பந்தப்பட்ட IV/AHV அலுவலகத்துடன் உறுதிப்படுத்திக்கொள்ளவும்

உதவித்தொகை வகை	தற்போதைய தொகை	01.01.2027 முதல்
IV – ஒரு காதுக்கு	CHF 840	CHF 1,074
IV – இரு காதுகளுக்கு	CHF 1,650	CHF 2,115
AHV – ஒரு காதுக்கு	CHF 630	CHF 693
AHV – இரு காதுகளுக்கு	CHF 1,237.50	CHF 1,361

பாலியல் தொழிலிலிருந்து வெளியேற விரும்புவோருக்கு ஆதரவு:

சூரிச்சில் மூன்றாண்டுச் சேவை ஒப்பந்தங்கள்!



சூரிச் கன்டோனில் பாலியல் தொழிலி லிருந்து வெளியேறி, மாற்று வாழ்வா தாரத்தை அமைத்துக்கொள்ள விரும்பு வோருக்கான ஆதரவுச் சேவைகள் வலுப்படுத்தப்படவுள்ளன.

இதுவரை வருடாந்த நிதியுதவி பெற்றுவந்த Heartwings, Solidara Zürich - Isla Victoria, Heilsarmee Rahab Zürich ஆகிய மூன்று அமைப்புகளுடன், 2027 முதல் மூன்றாண்டுச் சேவை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவி க்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின்கீழ், ஒவ்வொரு அமைப்புக்கும் ஆண்டுக்கு 80,000 சுவிஸ் பிராங்குகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிதி ஆதரவுச் சேவைகளை வழங்கும் அமைப்புகளுக்கானது; தனிநபர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் கொடுப்பனவு அல்ல.

பாலியல் தொழிலிலிருந்து வெளியேற விரும்புவோரின் தனிப்பட்ட இலக்குகளை வகுத்தல், தொடர்ச்சியான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வழங்குதல், நிர்வாகச் செயல்முறைகளில் உதவுதல் ஆகியவை ஒப்பந்தச் சேவைகளில் அடங்குகின்றன.

உதவி தேவைப்படுவோர் மேற்குறிப்பிட்ட அமைப்புகளை அணுகித் தங்களுக்குப் பொருத்தமான ஆதரவுச் சேவைகள் குறித்துக் கேட்டறியலாம்.

சுவிற்சர்லாந்து சூரிச் அருள்மிகு சிவன் கோவில் கந்தசட்டி சூரன்போர்













திருமலை நவம் அவர்களின் 'இராவணன் கோட்டம்' வரலாற்று ஆய்வு நூல் ஒரு அகலப் பார்வை.... (கன்னியா வரலாறு)....



கடந்த வாரத் தொடர்ச்சி...

இதற்கெல்லாம் ஒருபடி மேல் சென்று பௌத்த பிக்குகள் அரச ஆதரவுடன் தமிழர் பிரதேசங்களில் அத்துமீறி அடாவடித்தனமாகப் புத்தர் சிலைகளை வைத்தும்இ தாதுகோபுரங்கள்இ பன்சாலைகள் அமைத்தும்இ சைவ ஆலயங்கள்இ பள்ளிவாசல்கள்இ கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றை இடித்தழித்துஇ புனித சின்னங்களைச் சிதைத்தும்இ அழித்தும் அட்டகாசங்கள்இ அடாவடித்தனங்கள் புரிந்தும் காணிகளை அபகரித்துக் கொண்டனர். இத்தகைய சம்பவம் ஒன்றுதான் கன்னியாவில் அரசஇ தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் 2009 இன் பின்னர் வில்கம் விகாரை விகாராதிபதியினால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இராவணன் கோட்டம் என்ற வரலாற்று நூலின் மூலம் திருமலை நவம் பல்வகைப்பட்ட ஆதாரங்களுடன் நிருபித்திருக்கின்றார்.



சின்னத்தம்பி குருபரன்



இராமாயண காலத்தில் இருந்து தமிழரின் பூர்வீக வழிபாட்டுத் தலமாகவும்இ இறந்த ஆத்மாக்களுக்குப் பிதிர்கடன் நிறைவேற்றுகின்ற இடமாகவும் இருந்துவந்த பிள்ளையார்இ சிவன் ஆலயங்களைச் சிதைத்து அழித்துவிட்டு அவை அமைந்திருந்த காணிகள் தொல்பொருளியல் திணைக்களத்தினாலும் வில்கம் விகாரை விகாராதிபதியினாலும் அடாவடித்தனமாக அபகரிக்கப்பட்டு தாதுகோபுரமும்இ பன்சாலையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவங்களைப் புகைப்படங்கள்இ சான்தாரங்களோடு வெளிப்படுத்தி இருப்பது நூலாசிரியரின் துணிச்சலையும் அவரின் புலமையையும் உறுதிப்படுத்தி நிற்கிறது.

4. கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசம் தொடர்பான காணி உரிமங்களும் சிக்கல்களும்.

இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு மேலிருந்து கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசக் காணி தொடர்பான உரிமங்களை மிகத் தெளிவாக வெளிப்படுத்த இருப்பது ஆசிரியரின் ஆய்வுத் தேடலுக்கும்இ அர்ப்பணிப்புக்கும் சிறந்த சான்றாகும். போர்த்துக்கீசர்இ ஒல்லாந்தர்இ ஆங்கிலேயர் ஆட்சிக்காலத் தளபதிகளின் குறிப்புக்கள்இ இந்நாடுகளில் இருந்து கன்னியாவுக்கு வருகை தந்த பயணிகளின் குறிப்புகள்இ 1956 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரினால் நிலாவெளிப் பிரதேச சபைக்குப் பராதீன்படுத்தபட்ட காணி உரிமம்இ மடத்தடி மாரியம்மன் ஆலயத் தர்மகர்த்தா திருமதி கோகிலரமணி அவர்களிடம் காணப்பட்ட காணி உரிமம் தொடர்பான ஆவணங்கள்இ கன்னியா மடம்இ கன்னியா சமாதி தொடர்பான உரிமங்கள்இ தம்பலகாமம் சண்முகம்பிள்ளையிடம் இருந்த காணி உரிமைச் சான்றுகள்இ அந்தியட்டி மடப் பராமரிப்பு தொடர்பான விபரங்கள்இ சண்முகா தர்மத் தாபனத்திடம் இருந்த பத்திரங்கள்இ கடிதங்கள் அத்தோடு குளக்கோட்டன்இ 2 ஆம் கஜபாகு மன்னன் ஆகியேரின் புனருத்தாரணப் பங்களிப்புக்கள்இ வரலாற்று இலக்கியச் சான்றுகள்இ 150 வருடங்களுக்கு மேலாகக் கன்னியா வெந்நீரக் கிணறுகள் பராமரிப்புஇ பிள்ளையார்இ சிவன் ஆலயப் பராமரிப்புஇ நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பான அனைத்துச் சான்றாதாரங்களையும் திரட்டி நூலில் வெளிக் கொணர்ந்திருப்பது ஆசிரியரின் பெருமுயற்சியாகும்.

5. திட்டமிட்ட காணிச் சவீகரிப்பில் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் பங்கு.

இலங்கை தொல்பொருளியல் திணைக்களம் சுதந்திரத்துக்குப் பின்னர் இருந்து இன்றுவரை பௌத்தஇ சிங்களப் பேரினவாதிகளின் திணைக்களமாகவே செயற்பட்டு வருகிறது. ஏனைய இனம்இ மதத்தவரின் வழிபாட்டத் தலங்கள்இ தொல்லியல் தொன்மங்கள்இ சாசனங்கள்இ சான்றாதாரங்களைப் பாதுகாப்பதையும்விட பௌத்தஇ சிங்கள தொன்மங்களைப் பாதுகாப்பதிலும்இ ஏனைய இனம்இ மதத்தவரின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதிலுமே முழுமூச்சாகச் செயற்பட்டு வருகிறது. அத்திணைக்களத்திற்கு இன்றுவரைச் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் எவரும் நியமனம் செய்யப்படாமல் இருப்பது திட்டமிட்ட சதி வேலைகளைச் செய்வதற்கு என்பது வெளிப்டையாகிறது.

கன்னியா வெந்நீரூற்றுக் கிணறுகள்இ பிள்ளையார்இ சிவன் கோயில்கள் தொடர்பான பிரச்சினைகள் பூதாகரமாதற்குக் காரணமாக இருந்தவர்கள் தொல்பொருள் திணைக்களத்தினர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்கள் சகல இன மதத்தவர்களுக்காகவும் பணியாற்றி இருந்திருந்தால் நாட்டில் தோன்றிய இனம்இ மதரீதியான பல பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம்.

இது போலவே வட மாகாணத்தில் முல்லைத்தீவு தண்ணிமுறிப்புக் குளம் அருகில் உள்ள குருந்தூர்மலைப் பகுதியில் பழைமையான -சைவ சமய வழிபாட்டுத்



தலங்கள் இருந்ததாகக் கூறப்படும் சூழலில்இ அங்கு தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுசரணையோடு புதிய பௌத்த விகாரையும் பன்சாலையும் கட்டப்பட்டமை. வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலை தமிழர்களின் பாரம்பரிய ஆதிசிவன் வழிபாட்டுத் தலமாகக் கருதப்படுகின்றது. தொல்லியல் திணைக்களம் உரிமை கோரியதை அடுத்துஇ அப்பகுதி மக்கள் வழிபாடு நடத்துவதற்குப் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டதோடுஇ அங்குள்ள சிலைகள் சேதப்படுத்தப்பட்ட சம்பவங்களும் தொடர்ச்சியாகப் பதிவாகிஇ நீதிமன்ற விசாரணைகளும் மக்கள் போராட்டங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.


இது போன்றதொரு நிகழ்வாகவே யாழ்ப்பாண மாவட்டம் தையிட்டியில் அத்துமீறிய விகாரை அமைப்பும் பல எதிர்ப்புகள்இ ஆர்ப்பாட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் புத்தர் சிலை வைத்தோடு விகாரைஇ பன்சாலை ஆகியனவும் அமைத்துக் கொண்டனர். அதேபோல் மன்னாரஇ திருகோணமலைஇ மட்டக்களப்புஇ அம்பாறை மாவட்டங்களிலும் பல சம்பவங்கள் 1983 க்குப் பின்னர் இருந்து நடைபெற்று வந்து 2009 இல் உள்நாட்டு யுத்தம மௌனிக்கப்பட்டதில் தொடர்ந்து பெருவாரியான சம்பவங்கள் இடம்பெற்றுப் பல்லாயிரக்கணக்கான ஹெக்டெயர் தமிழர் பூர்விக நிலங்கள் தொல்பொருளியல் திணைக்களம்இ வனபரிபாலனத் திணைக்களத்தினாலும் புத்தர் சிலை வைப்புஇ விகாரை அமைப்புஇ முப்படையினருக்கான முகாம் அமைப்பு என்பவற்றுக்காகவும் அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

கன்னியா வெந்நீரூற்று மற்றும் கோயில்கள் அமைந்திருந்த காணி உரிமம் தொடர்பான ஆவணங்கள் இருந்தும் தொல்பொருளியல் திணைக்களம் பௌத்த தொன்மம் என்ற கடிவாளத்தைப் போட்டுக் காணிகள் யாவையும் அடாத்தாக அபகரித்துக் கொண்டது. தொல்லியல் மரபுரிமைகள் சட்டத்துக்கு அமைவாகத் தொல்பொருளியல் திணைக்களம் நீதிமன்றத்துக்குக் கொடுத் அறிக்கைக்கு அமைவாகவே திருகோணமலை உயர் நிதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் தீர்ப்பானது 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கு பிடித்த' கதையாகிவிட்டது என வேதனையோடு குறிப்பிடுகின்றார் நூலாசிரியர்.

கன்னியாப் பிரதேசத்தில் தமிழரின் பூர்வீகக் காணிகளைத தொல்பொருளியல் திணைக்களமும் வில்கம் விகாரை விகாராதிபதியும் அபகரித்தெடுக்க உயர் நீதிமன்றத் தீர்ப்பும் தொல்பொருளியல் திணைக்கள ஆணையாளர் நாயகம் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையின்படியே அமைந்திருந்தது என நூலாசிரியர் திருமலை நவம் வேதனையோடு பதிவு செய்திருக்கின்றார். 2002 ஆம் ஆண்டில் இருந்து தொடங்கிய பூர்வீகக் காணி மீட்புப் போராட்டத்துக்குக் கடுகு போல் பிள்ளையார் கோயில் அமைப்பதற்குப் பல்வேறு நிபந்தனைகளுடன் 10 குழி (பேர்ச்) நிலம்தீர்ப்பின் மூலம் கிடைத்தமையை வேதனையோடு நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

6. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணி அபகரிப்புக்களும் புத்தர் சிலைகள்இ தாதுகோபங்கள் அமைத்தலும்.

வடக்குஇ கிழக்கு மாகாணங்களில் பெருமளவு தமிழ் மக்களின் பூர்வீகக் காணி அபகரிப்புக்களும் புத்தர் சிலைகள்இ தாதுகோபங்கள் அமைத்தலும் கூடுதலாக முல்லைத்தீவுஇ மன்னர்இ வவுனியாஇ திருகோணமலைஇ மட்டக்களப்புஇ அம்பாறை மாவட்டற்களில் நிகழ்ந்திருக்கின்றன. சிறுபான்மையினர் பௌத்தஇ சிங்கள பேரினவாதிகளால் பௌத்த நாடு என்ற அடிப்படைவாத மேலாதிக்கக் கொள்கையை நிலை நிறுத்துவதற்காக 1915 இல் இருந்து இன்றுவரை அடக்கி ஒடுக்கி வந்தத்டுஇ வடக்குஇ கிழக்குஇ மலையகம் ஆகிய



பிரதேசங்களில் தமிழர்களைச் சிறுபான்மையினர் ஆக்குவதற்காகக் கலவரங்களைத் தூண்டிவிட்டும்இ ஸ்ரீமா-சாத்திரி ஒப்பந்தம்இ ஸ்ரீமா-காந்தி ஒப்பந்தம்இ காணி அபகரிப்புஇ இனப்படுகொலைஇ யுத்தம்இ புத்தர் சிலை வைப்புஇ தாதுகோபுரங்கள் அமைத்தல்இ அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் என பல்லாயிரக் கணக்கான ஹெக்டெயர் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஊடாக அல்லைஇ பதவியாஇ கந்தளாய் ஆகிய திட்டங்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர.. 1958 இன் பின்னர் பதவியாவில் இருந்து தமிழர்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டுஇ தமிழர் தொன்மங்களும் அழிக்கப்பட்டு முழுச் சிங்களக் குடியேற்றக் கிராமமாக மாற்றப்பட்டது. முதலிக்குளம் என்ற தமிழ்க் கிராமம் மொறவெவ என மாற்றப்பட்டுத் தமிழர்கள விரட்டி அடிக்கப்பட்டார்கள். அதேபோல் பெரியவிளாங்குளம் மகாதிபுல்வெவ என மாற்றப்பட்டு தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். அத்தோடு சேருவில என்ற தேர்தல் தொகுதியும் உருவாக்கப்பட்டது. 1958 இன் பின்னர் இருந்து திருகோணமலை மாவட்டத்தில் இது போன்று பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை அபகரித்துஇ திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழர்களைச் சிறுபான்மையாக்கும் செயலைத் திட்டமிட்டுக் கச்சிதமாக நிறைவேற்றி இருக்கின்றனர்.

இவ்வாகத் திருகோணமலை மாவட்டத்தில் நிகழ்ந்த காணி அபகரிப்புக்கள்இ திட்டமிட்ட குடியேற்றங்கள்இ நிலத் தொடர்பு துண்டிப்புக்கள் (வெலிஓயாஇ நேருவில)இ அத்துமீறிய அடாவடித்தனமான புத்தர் சிலை வைப்புக்கள்இ விகாரைகள்இ பன்சாலைகள் அமைத்தமைஇ இதற்கு அரச படைகளும் தொல்பொருளியல் திணைக்களம்இ வனபரிபாலனத் திணைக்களம் ஆகியன பக்கபலமாக இருந்தன என்பதையும் வேதனையோடும் பல்வகைப்பட்ட ஆதாரங்களோடு மண்ணையும் மக்களையும் உயிர் மூச்சாக நேசித்துக் கொண்டிருக்கும் நூலாசிரியர் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

8. எதிர்காலத்தில் கன்னியா வெந்நீரூற்றுஇ வழிபாட்டுத் தலங்கள்இ காணி தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய சுமுகமான நடவடிக்கைகள்.


கன்னியாவிலுள்ள தமிழர்இ தொன்மங்கள்இ பூர்விக நிலம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காகக் கன்னியா மரபுரிமை அமைப்புஇ தென்கயிலை ஆதினம்இ இராவண சேனா அமைப்புஇ அகத்தியர் ஆதினம்இ மடத்தடி மாரியம்மன் ஆலயத் தர்மகர்த்தாஇ இளைஞர் அமைப்புக்கள்இ சைவ சமய அமைப்புக்கள்இ அரசியல் கட்சிகள் யாவும் அமைதி வழியிலும்இ எதிர்ப்புஇ ஆர்ப்பட்டம்இ பேரணிஇ கலந்துரையாடல்கள்இ கடிதங்கள்இ பொலிஸில் முறைப்பாடுஇ சனாதிபதி மற்றும் அமைச்சருடனான சந்திப்புக்கள்இ பாராளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் ஆற்றிய உரைஇ திருகோணமலை மாவட்டச் செயலகத்தல் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இடம்வெற்ற கலந்துரையாடல் யாவும் தோல்வியில் முடிந்த பின்னர் இவிடயத்தில் ஆர்வம் கொண்ட சில சட்டத்தரணிகளின் ஆலொசனைக்கு இணங்க இறுதி முயற்சியாகத் திருகோணமலை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இறுதித் தீர்ப்பில் தீர்ப்பில் தமது கோரிக்கை நிறைவேறாமையை மனம் நொந்துஇ ஏமாந்துஇ வேதனையோடு தருமலை நவம் இந்நூலில் பதிவிட்டிருக்கின்றார்

அடுத்த வாரம் தொடரும்...

சுவிஸ் புத்தக விருது 2026:

Unwucht நாவலுக்காக Sarah Elena Müller தெரிவு!

Bern எழுத்தாளருக்கு 30,000 சுவிஸ் பிராங்குகள் பரிசு



2026ஆம் ஆண்டுக்கான சுவிஸ் புத்தக விருது, Bern பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர் Sarah Elena Müller எழுதிய «Unwucht» நாவலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Basel நகரில் நடைபெற்ற BuchBasel இலக்கிய விழாவின் ஒரு பகுதியாக, நவம்பர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள அரங்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் காதல் உறவை மையமாகக் கொண்ட இந்நாவலில், மொழியையும் கவித்துவமான வெளிப்பாட்டு முறைகளையும் எழுத்தாளர் சிறப்பாகக் கையாண்டுள்ளதாக நடுவர் குழு பாராட்டியுள்ளது.

நாவலின் கதைசொல்லியான Alice, போதைப்பொருள் பழக்கமுள்ள Rio என்பவரைக் காதலிக்கிறார். ஏழு ஆண்டுகள் நீடித்த அவர்களது உறவைப் பற்றி, மேலும் ஏழு ஆண்டுகள் கடந்த பின்னர் Alice விவரிக்கிறார். இவ்வாறு இரண்டு காலகட்டங்களில் நகரும் நாவல், அந்த உறவை வெளிப்படுத்துவதுடன், ஒரு கதைக்கு அர்த்தமும் விளக்கமும் அளிக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

தனித்துவமான மொழிப்படிமங்கள், கூர்மையான வாக்கியங்கள் மற்றும் துணிச்சலான நகைச்சுவையுடன், இலகுவான உணர்வுக்கும் மனநெருக்கடிக்கும் இடையில் நாவல் பயணிப்பதாக நடுவர் குழு தெரிவித்துள்ளது.

Sarah Elena Müller, ஏற்கெனவே 2023ஆம் ஆண்டு தனது «Bild ohne Mädchen» படைப்புக்காக இவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். இம்முறை Lukas Bärfuss, Hayat Erdo□an, Yael Inokai மற்றும் Sonja Sophie Kreis ஆகிய நான்கு எழுத்தாளர்களுடன் போட்டியிட்டு விருதை வென்றுள்ளார்.

விருது பெறும் Müller-க்கு 30,000 சுவிஸ் பிராங்குகளும், இறுதிப் பட்டியலில் இடம்பெற்ற ஏனைய நால்வருக்கும் தலா 3,000 பிராங்குகளும் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான விருதுப் போட்டியில், 52 பதிப்பகங்கள் மொத்தம் 87 நூல்களைச் சமர்ப்பித்திருந்தன. சுவிஸ் புத்தக விருது, LiteraturBasel அமைப்பும் சுவிஸ் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கமும் இணைந்து 2008ஆம் ஆண்டு ஆரம்பித்ததாகும்.

ஜெயந்திமாலா என்ற ஒளிபரப்புத்துறை ஆளுமை இவ்வுலகில் இருந்து விடைபெற்றார்

நினைவஞ்சலி

ஜெயந்திமாலா

ஒளிபரப்புத் துறையின் ஆளுமை

காற்றலைகளில் ஒலித்த குரல்...
நெஞ்சங்களில் நிலைத்த நினைவு



1990ஆம் ஆண்டிற்கு முதல் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியின் செய்திவாசிப்பாளராக தமிழ் ஊடகத்துறைக்கு அறிமுகமான ஜெயந்திமாலா அழகு குணசீலன் சுவிஸ் நாட்டில் காலமானார்.

அவருக்கு எனது அஞ்சலிகள்.

மட்டக்களப்பு குருமன்வெளியை சேர்ந்த இவர் பிரபல எழுத்தாளர் அருள் செல்வநாயகம் அவர்களின் புதல்வியாவார். எழுத்தாளரும் அரசியல் பத்தி எழுத்தாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அழகு குணசீலனின் துணைவியுமாவார்.

அந்த காலத்தில் இலங்கையில் ரூபவாஹினி தொலைக்காட்சி மட்டுமே ஒளிபரப்பானது. தனியார் தொலைக்காட்சிகள் எதுவும் இல்லை. தொலைக்காட்சி என்றால் ரூபவாஹினிதான். வானொலி என்றால் இலங்கை வானொலி. மட்டும் தான்.

ரூபவாஹினியில் செய்திவாசிப்பாளராக இணைந்து கொள்வதென்றால் இலகுவான காரியமல்ல. பல தடைகளை தாண்டி தமிழ் ஒளிபரப்புதுறையில் தன்திறமையால் மிளிர்ந்த அவர் ஆரம்பத்தில் ஜெயந்திமாலா அருள் செல்வநாயகம் என்ற பெயரில் தமிழ் நேயர்களுக்கு அறிமுகமானார்.

அக்காலத்தில் சிறந்த ஒளிபரப்பாளராக செய்தி வாசிப்பாளராக நேயர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தார்.

1990ஆம் ஆண்டிற்கு பின்னர் தன் குடும்பத்துடன் சுவிஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்த அவர் 35ஆண்டுகளுக்கு மேலாக சுவிஸ் நாட்டில் வசித்து வந்தார்.

அழகு குணசீலன் 1980களின் பின்னர் இலங்கையில் இருந்;த காலத்தில் மிக நெருக்கமான நண்பராக இருந்தவர். அவர் சுவிஸிற்கு வந்தபின்னர் தொடர்புகள் அறுபட்டு போய்விட்டது. சில வருடங்களுக்கு முதல் சுவிஸில் நடந்த எனது நூல் வெளியீட்டிற்கு அழகு குணசீலனும் ஜெயந்திமாலாவும் வந்திருந்தனர். அதன் பின்னர் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஜெயந்திமாலா எம்மை விட்டு விடைபெற்றார் என்ற கவலை மிகுந்த செய்தி கிடைத்திருக்கிறது. அவருக்கு எனது அஞ்சலிகள். அவரின் பிரிவால் துயரமடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன்

இரா.துரைரெத்தினம்

புகழ் வணக்கம்

திருமதி ஜெயந்திமாலா அழகு.குணசீலன்
குருமண்வெளி தந்த கலைத்துவ ஆளுமை
புலம்பெயர் வாழ்விலும் நிலத்தை மறவாத பெரு மகள்

குருமண்வெளியூரில் பாரம்பரியப் பெருமையும் பண்பாட்டு அடையாளமும் மிக்க குடும்பத்தில் பிறந்தவர் திருமதி ஜெயந்திமாலா குணசீலன். இலங்கையின் புகழ்பெற்ற பல்துறை ஆளுமையும் எழுத்தாளருமான அருள் செல்வநாயகம் அவர்களின் அன்பு மகள்.

முற்போக்கு அரசியல் சிந்தனை கொண்டவரும், முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வியாளருமான தோழர் குணசீலன் அவர்களின் துணைவியார்.

எனது மனைவியின் நெருங்கிய உறவினர்.

தனது வசீகரமான குரல்வளத்தாலும், தெளிவான உச்சரிப்பாலும் இலங்கை வானொலியிலும் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியிலும் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணியாற்றி, நேயர்களின் மனங்களில் தனித்துவமான இடத்தைப் பிடித்தவர் ஜெயந்திமாலா அவர்கள்.

தந்தையைப் போலவே எழுத்தாற்றலும் இலக்கிய ஆர்வமும் மிக்கவர். தனது எழுத்துப் பணிகளாலும் ஊடகப் பங்களிப்புகளாலும் தமிழ்ச் சமூகத்தில் தனக்கென ஓர் அடையாளத்தைப் பதித்தவர்.

அவரது தந்தையார் அருள் செல்வநாயகம் அவர்களின் மிக முக்கியமான எழுத்துச் சாதனையாகக் கருதப்படும் சுவாமி விபுலாநந்தர் பற்றிய கட்டுரைகளை முழுமையான தொகுப்பாக வெளியிட்டு, கிழக்கு மண்ணுக்கும் தமிழ் இலக்கிய உலகுக்கும் பெருமை சேர்த்தவர். தந்தையாரின் அறிவுச் செல்வத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்த்த அவரது பணி என்றும் நினைவுகூரத்தக்கது.

இன்று அவர் எம்மிடையே இல்லை என்ற செய்தி மிகுந்த வேதனையைத் தருகிறது.

இலங்கைத் தமிழ்ச் சமூகம், குறிப்பாகக் கிழக்கு மண், தன் மீது அன்பும் மதிப்பும் கொண்ட ஒரு சிறந்த மகளை இழந்திருக்கிறது.

அவரது குரலும், எழுத்தும், பண்பாட்டுப் பங்களிப்புகளும் எம் நினைவுகளில் என்றும் வாழும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தலை தாழ்ந்த புகழ் வணக்கம்

பால. சுகுமார்



என்னைப் பொறுத்தவரையில் இலங்கை வானொலியில் சர்வதேச ஒளிபரப்பு ஆசிய சேவை தமிழ் சேவை இரண்டு தென்னிந்திய சேவை போன்ற அனைத்து சேவைகளிலும் கடமையாற்றியவர் ஜெயந்திமாலா அருட் செல்வநாயகம் திருமணத்துக்கு பின் ஜெயந்தி மாலா குணசீலன் என்று தன் கணவரின்பெயருடன் இணைத்து அறிவிப்பு செய்து வந்தவர் மிகவும் துடுதுடுப்பான ஒரு சகோதரி இவரைப் பற்றி தெரிந்திருந்தவர்கள் நாகபூஷணி கலீஸ்டா புர்கான் பி இப்திகார் இன்னும் இவரைப் பற்றி நன்கு அறிவார்கள் இவரைப் பற்றி இப்போது அறிவிப்பாளர்கள் தெரிந்து இருப்பார்களோ இல்லையோ என்று எனக்கு தெரியாது அருமையான சகோதரி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறப்பிலும் கடவுள் அவரை ஆசீர்வதிக்க பிராத்திக்கின்றேன்

Gnanapragasam Pragash JP

சுவிஸ் விமான நிலையங்களில் காத்திருப்பு நேரத்தைக் குறைக்க புதிய திட்டம் பரிசீலனை!

ஐரோப்பிய EES நுழைவு-வெளியேற்றப் பதிவுமுறையால் எல்லைச் சோதனைகளில் ஏற்படும் தாமதத்தைக் குறைப்பது குறித்து, மத்திய நீதித்துறை மற்றும் காவல்துறைத் தலைவர் Beat Jans, எல்லைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் விமானத்துறை பிரதிநிதிகளுடன் ஆலோசித்துள்ளார்.

National Facilitating Programme (NFP) என்ற திட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியேயுள்ள நாட்டவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் முன்பதிவு மற்றும் முன்சோதனை செய்துகொண்டு, பின்னர் தானியங்கி e-gates வழியாக விரைவாகச் செல்லும் வாய்ப்பு பரிசீலிக்கப்படுகிறது.

இத்திட்டம் இன்னும் அமுலுக்கு வரவில்லை. தகுதி நிபந்தனைகள் மற்றும் அறிமுகத் திகதி குறித்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

EES முறையில் கைரேகை மற்றும் முகப்பதிவு தேவைப்படுவதால், அதிக பயணிகள் வரும் காலங்களில் காத்திருப்பு நீள்கிறது. செல்லுபடியாகும் சுவிஸ் வதிவிட அனுமதி வைத்திருப்பவர்களுக்கு EES பதிவு பொருந்தாது எனச் செய்தி குறிப்பிடுகிறது.

போர்க்களத்தில் செயற்கை நுண்ணறிவு: தன்னாட்சி ஆயுதங்களுக்கு விதிகளை உருவாக்க ஜெனீவாவில் ஐ.நா. ஆலோசனை!



போரில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு அதிகரித்துவரும் நிலையில், மனிதத் தலையீடின்றி இலக்குகளைத் தேர்ந்தெடுத்துத் தாக்கக்கூடிய தன்னாட்சி ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து ஐ.நா. உறுப்பு நாடுகள் இந்த வாரம் ஜெனீவாவில் கலந்துரையாடுகின்றன. மனித உயிரைப் பறிக்கும் முடிவை இயந்திரங்களிடம் ஒப்படைக்கலாமா? என்பதே இந்த விவாதத்தின் மையக் கேள்வியாக உள்ளது.

பாசல் மருத்துவமனைகளில் வன்முறை அதிகரிப்பு!

பாசல் பல்கலைக்கழக மருத்துவமனை (USB) மற்றும் குழந்தைகள் மருத்துவமனை (UKBB) ஆகியவற்றில் 2025ஆம் ஆண்டு 1,512 வன்முறை உள்ளிட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது முந்தைய ஆண்டுகளைவிட குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

பெரும்பாலானவை திட்டுதல், அவமதித்தல் மற்றும் மிரட்டல் சம்பவங்களாகும். ஐந்தில் ஒரு பங்கிற்கும் அதிகமானவை உடல்ரீதியான வன்முறைகள். நோயாளிகள் மட்டுமன்றி, உறவினர்கள் மற்றும் பார்வையாளர்களும் இதில் ஈடுபடுகின்றனர்.

2025இல் காவல்துறை 217 தடவைகள் தலையிட்டுள்ளது. பணியாளர்களைப் பாதுகாக்க, பதற்றத்தைத் தணிக்கும் பயிற்சிகளையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் USB முன்னெடுத்துள்ளது.

சூரிச்சில் Kindergarten சேர்க்கையைத் தள்ளிப்போட இலவச ஆலோசனை கட்டாயம்: விண்ணப்பிக்க மார்ச் 31 கடைசி நாள்!



சூரிச் நகரில் குழந்தையை Kindergarten வகுப்பில் ஓராண்டு தாமதமாகச் சேர்க்க விரும்பும் பெற்றோர், மருத்துவப் பரிந்துரையுடன் இலவச குடும்ப ஆலோசனையில் பங்கேற்றதற்கான சான்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

புதிய நடைமுறை 2027/28 கல்வியாண்டிலிருந்து அமுலாகிறது. இதற்கான விண்ணப்பங்களை 2027 மார்ச் 31ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

தாமதமான சேர்க்கையை விரும்புவதற்கான காரணங்களையும், கூடுதலாகக் கிடைக்கும் ஆண்டைக் குழந்தையின் வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் நிபுணருடன் பெற்றோர் கலந்துரையாடுவர். இந்த ஆலோசனை மருத்துவப் பரிந்துரைக்கு மாற்றாகாது; குழந்தையின் வளர்ச்சி குறித்த மருத்துவ மதிப்பீடும் இதில் மேற்கொள்ளப்படாது.

பெற்றோர் FamBe, Beratungsstelle Pinocchio, Arche für Familien அல்லது Marie Meierhofer Institut für das Kind (MMI) ஆகியவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஓராண்டு தாமதமாகச் சேர்ப்பது எல்லாக் குழந்தைகளுக்கும் தானாகவே நன்மை தராது என்றும், சிறப்பு ஆதரவு தேவைப்படும் குழந்தைகளுக்குப் பாடசாலையில் உரிய உதவிகள் வழங்கப்படும் என்றும் நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சூரிச் விமான நிலையத்தில் தானாக இயங்கும் சக்கர நாற்காலிகள்!



நடமாடுவதில் சிரமமுள்ள பயணிகள் சுயமாகச் செல்வதற்கு உதவும் வகையில், நான்கு தானியங்கி சக்கர நாற்காலிகளை மூன்று ஆண்டுகளுக்குச் சூரிச் விமான நிலையம் சோதனை செய்கிறது.

ஒவ்வொரு நாற்காலியிலும் உள்ள 30 சென்சார்கள், சுற்றுப்புறத் தடைகளைக் கண்டறிந்து தேவையானபோது தானாக நிறுத்த உதவுகின்றன. போர்டிங் பாஸ் அல்லது கடவுச்சீட்டுச் சோதனை தேவைப்படாத பகுதிகளில், நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில் இவை இயங்கும்.

பயணிகளின் சுயசார்பை மேம்படுத்துவதுடன், பணியாளர்களின் பணிச்சுமையைக் குறைக்க முடியுமா என்பதும் சோதிக்கப்படும்.

இந்த வசதியைப் பயன்படுத்துவது கட்டாயமல்ல. பயணிகள் தொடர்ந்து பணியாளர்களின் உதவியையும் பெறலாம்.

சுவிஸில் ஆன்டிபயாட்டிக் பயன்பாடு குறைவு:

மருந்து எதிர்ப்புக் கிருமிகளால் உயிரிழப்புகள் அதிகரிப்பு!

சுவிட்சர்லாந்தில் ஆன்டிபயாட்டிக் பயன்பாடு குறைந்துள்ளபோதிலும், அவற்றுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட கிருமிகளால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாக "Swiss Antibiotic Resistance Report 2026" தெரிவிக்கிறது.

2025ஆம் ஆண்டில் மனித மருத்துவத்தில் ஆன்டிபயாட்டிக் பயன்பாடு, முந்தைய ஆண்டைவிட சுமார் 11% குறைந்துள்ளது. இதன்மூலம் 2027ஆம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நாடு முன்கூட்டியே எட்டியுள்ளது. எனினும், ஆய்வில் கண்காணிக்கப்பட்ட மருந்து எதிர்ப்புக் கிருமிகளால் ஏற்பட்டதாக மதிப்பிடப்படும் உயிரிழப்புகள், 2010இல் 135ஆக இருந்த நிலையில், 2024இல் 258ஆக அதிகரித்துள்ளன.

வெளிநோயாளர் சிகிச்சையில் வழங்கப்படும் ஆன்டிபயாட்டிக் மருந்துப் பரிந்துரைகளில் சுமார் ஐந்தில் ஒன்று மருத்துவ வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப இல்லை எனவும் அறிக்கை குறிப்பிடுகிறது. ஜேர்மன் மொழிப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில், மேற்கு சுவிஸில் இம்மருந்துகள் 1.5 மடங்கிற்கும் அதிகமாக பரிந்துரைக்கப்படுகின்றன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட சுவிஸ் விவசாயம்:

2026 இல் வருமானம் 17% வீழ்ச்சியடையும் என மதிப்பீடு!

வெப்பம், வறட்சி மற்றும் பன்றி இறைச்சிச் சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி ஆகியவை 2026ஆம் ஆண்டு சுவிஸ் விவசாயத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளதாக மத்திய புள்ளிவிவர அலுவலகத்தின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

விவசாயத் துறையின் மொத்த உற்பத்தி மதிப்பு 5.1% குறைந்து 12 பில்லியன் பிராங்குகளாகவும், மொத்த நிகர வருமானம் 17% குறைந்து 2.8 பில்லியன் பிராங்குகளாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கோடைக்கால வறட்சியால் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தீவனப் பயிர்களின் விளைச்சல் சுமார் 20%, சீனிக்கிழங்கு 33%, உருளைக்கிழங்கு 25% குறைந்துள்ளன. சீனிக்கிழங்கு மற்றும் உருளைக்கிழங்கு அறுவடைகள் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, 2025இல் ஒரு விவசாயப் பண்ணையின் சராசரி வருமானம் 7.5% அதிகரித்து 87,900 பிராங்குகளாக இருந்தது.

சூரிச் விமான நிலையத்தில்

புதிய தினசரி சாதனை:

ஒக்டோபர் 4இல் 124,751 பயணிகள்!



சூரிச் விமான நிலையத்தை 2026 ஒக்டோபரில் 3,169,713 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே மாதத்தைவிட 0.1% அதிகமாகும்.

ஒக்டோபர் 4ஆம் திகதி மட்டும் 124,751 பயணிகள் பதிவாகியுள்ளனர். இது விமான நிலைய வரலாற்றில் அதிக பயணிகள் பதிவான நாளாகும்; முந்தைய சாதனையைவிட சுமார் 2,000 பேர் அதிகம்.

ஒக்டோபரில் விமானப் புறப்பாடுகள் மற்றும் தரையிறக்கங்கள் 1.2% அதிகரித்து 24,914ஆக உயர்ந்தன. எனினும், இருக்கை நிரப்பல் விகிதம் 1.4 சதவீதப் புள்ளிகள் குறைந்து 82.9%ஆக இருந்தது.

சரக்குப் போக்குவரத்து 14.1% குறைந்து 34,219 தொன்னாக பதிவாகியுள்ளது.

Zürich–Dübendorf சோதனை:

12 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள், துப்பாக்கிகள், CHF 60,000 பறிமுதல்; இருவர் கைது!



Zürich மற்றும் Dübendorf பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நடவடிக்கையில், போதைப்பொருள் விற்பனைச் சந்தேகத்தின் பேரில் 34 வயதுடைய ஜெர்மன் நாட்டவரும், அவருடன் வசித்துவந்த 44 வயதுடைய ஜெர்மன் நாட்டுப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவம்பர் 12ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்குச் சற்று முன்னர், Zürich-Leimbach பகுதியில் கன்டோன் பொலிஸார் கார் ஒன்றைச் சோதனையிட்டனர். அதன் சாரதியிடம் அதிகளவு கொக்கெய்ன் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, Dübendorf பகுதியில் உள்ள அவரது வீட்டில் பொலிஸார் சோதனை நடத்தினர். அங்கிருந்த அவரது சக குடியிருப்பாளரான பெண்ணும் கைது செய்யப்பட்டார்.

வீட்டுச் சோதனையில், ஒன்பது கிலோவுக்குச் சற்றுக் குறைவான கொக்கெய்ன், இரண்டு கிலோவுக்கும் அதிகமான ஹஷீஷ், ஒரு கிலோவுக்குச் சற்றுக் குறைவான 2C-B மற்றும் சிறிய அளவிலான ஏனைய போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், சுமார் 60,000 சுவிஸ் பிராங்குகள் ரொக்கம், பயன்பாட்டுக்குரிய தோட்டாக்களுடன் தாக்குதல் துப்பாக்கி, வெற்றுத் தோட்டாக்களைச் சுடும் கைத்துப்பாக்கி மற்றும் காற்றழுத்தக் கைத்துப்பாக்கி ஆகியவையும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் Zürich கன்டோன் அரசுத் தரப்பு வழக்குத் தொடருநர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விசாரணைக் காவலில் வைக்குமாறு அந்த அலுவலகம் உரிய நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளது



Antibiotika மருந்துகள் வேலை செய்யாமல் போனால்?

நவீன மருத்துவத்துக்கு WHO எச்சரிக்கை!

Antibiotika மருந்துகள் நோய்க்கிருமிகளுக்கு எதிராக செயல்படாமல் போகும் Antibiotika-Resistenzen உலகளவில் வேகமாக அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு WHO எச்சரித்துள்ளது.

சாதாரண பிரசவம், சிறிய அறுவைச் சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை அல்லது நீண்டகால நோய்களுடன் வாழும் நோயாளிகளின் சிகிச்சை கூட எதிர்காலத்தில் அதிக ஆபத்தானதாக மாறலாம் என WHO தெரிவித்துள்ளது.

WHO நிபுணர் Jean Pierre Nyemazi கூறுவதன்படி, Antibiotika மற்றும் பிற மருந்து எதிர்ப்புத் தன்மைகள் நவீன மருத்துவத்தின் எதிர்காலத்தையே அச்சுறுத்துகின்றன.

இந்த எதிர்ப்பு தன்மைகள் பெரும்பாலும் Antibiotika மருந்துகள் அதிகமாகவோ தவறாகவோ பயன்படுத்தப்படுவதால் உருவாகின்றன. மனிதர்களிடம் மட்டுமல்லாமல், தொழில்துறை கால்நடை வளர்ப்பிலும் Antibiotika தவறாகப் பயன்படுத்தப்படுவது முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

2021ஆம் ஆண்டில் Antibiotika-Resistenzen காரணமாக உலகளவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலை தொடருமானால், அடுத்த 25 ஆண்டுகளில் இதனால் 39 மில்லியன் உயிரிழப்புகள் ஏற்படக்கூடும் என WHO எச்சரிக்கிறது.

WHO சிறப்பு நிபுணர் Pravarsha Prakash கூறியதாவது:

“தொற்றுகளைத் தடுக்குவது தான் Antibiotika தேவையை குறைக்கும் சிறந்த வழி.”

ஆனால் WHO வழிகாட்டுதல்களை முழுமையாக நடைமுறைப்படுத்திய நாடுகள் உலகளவில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு உலக சுகாதார சபை 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய பல இலக்குகளை நிர்ணயித்திருந்தது. இதில் தொற்று தடுப்பு, மருத்துவமனைகளில் மருந்து பயன்பாட்டு கட்டுப்பாடு, பரிசோதனை திறன் மற்றும் Resistenz கண்காணிப்பு போன்றவை அடங்கும்.

Reka முன்பதிவுத் தகவல்களுடன் WhatsApp மோசடி: கிரெடிட் கார்டு விவரங்களை வழங்காதீர்கள்!



சுவிஸின் Reka விடுமுறை முன்பதிவுகளைச் செய்தவர்களை, அவர்களது உண்மையான முன்பதிவுத் தகவல்களைப் பயன்படுத்தி மோசடிக்காரர்கள் WhatsApp வழியாகக் குறிவைக்கின்றனர் என Cybercrimepolice.ch எச்சரித்துள்ளது.

Reka விடுமுறைக் கிராமத்தின் விருந்தினர் சேவைப் பிரிவாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் மோசடிக்காரர்கள், பயணியின் பெயர், தங்குமிடம், வருகை-புறப்பாட்டுத் திகதிகள் மற்றும் சரியான முன்பதிவு இலக்கம் ஆகியவற்றுடன் செய்தி அனுப்புகின்றனர்.

“24 மணிநேரத்திற்குள் முன்பதிவை உறுதிப்படுத்தாவிட்டால் தங்குமிடம் வேறொருவருக்கு வழங்கப்படலாம்” என அழுத்தம் கொடுத்து, இணைப்பைத் திறக்கச் சொல்கின்றனர். பணம் அறவிடப்படாது எனக் கூறினாலும், அந்த இணைப்பு தனிப்பட்ட தகவல்கள் மற்றும் கிரெடிட் கார்டு விவரங்களைத் திருடும் போலி இணையத்தளத்திற்கே செல்கிறது.

உண்மையான முன்பதிவுத் தகவல்கள் செய்தியில் இருப்பதால் மட்டும் அதை நம்ப வேண்டாம்.

பாதுகாப்பாக இருக்க:

WhatsApp செய்தியிலுள்ள இணைப்பைத் திறந்து கார்டு விவரங்களை வழங்காதீர்கள்.

ஏற்கெனவே உங்களிடமுள்ள அதிகாரப்பூர்வ தொடர்பு விவரங்கள் மூலம் Rekaவிடம் நேரடியாக விசாரியுங்கள்.

சந்தேகமான WhatsApp தொடர்பைப் புகாரளித்துத் தடை செய்யுங்கள்.

மோசடிச் செய்தியை Cybercrimepolice.ch தளத்திற்குத் தெரிவியுங்கள்.

ஏற்கெனவே கார்டு விவரங்களை வழங்கியிருந்தால், உடனடியாக வங்கி அல்லது கார்டு நிறுவனத்தைத் தொடர்புகொண்டு கார்டை முடக்குங்கள். பின்னர் உள்ளூர் கன்டோன் காவல்துறையைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்யுங்கள்.

சுவிஸில் அகதிப் பெண்களின் வேலைவாய்ப்புக்குத் தடைகள்:

தீர்வுகளை ஆராயும் EKM வருடாந்த மாநாடு!

அகதி அனுபவமுள்ள பெண்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதில் எதிர்கொள்ளும் தடைகளையும், அவற்றைக் கடப்பதற்கான வழிகளையும் மத்திய இடம்பெயர்வு ஆணைக்குழுவின் (EKM) 2026 வருடாந்த மாநாடு ஆராய்கிறது.

2026 நவம்பர் 17ஆம் திகதி Bernஇல் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அறிவியல், அரசியல், தொழில்துறை மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள், தற்காலிக அனுமதி பெற்றவர்கள் மற்றும் S பாதுகாப்பு அந்தஸ்து கொண்டவர்களை விரைவாக வேலைச்சந்தையில் இணைக்கும் நடவடிக்கைகள் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. எனினும், பெண்கள் தனித்துவமான தடைகளை எதிர்கொள்வதாக மத்திய அமைச்சர் Beat Jans சுட்டிக்காட்டியுள்ளார். அவர்களின் தொழில் மற்றும் சமூகப் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான தனது உறுதியையும் அவர் தெரிவித்துள்ளார்.

வேலையையும் குடும்பப் பொறுப்புகளையும் இணைத்துச் சமாளிப்பதில் உள்ள சிரமங்கள், பெண்களின் தேவைகளுக்குப் போதிய கவனம் அளிக்காத ஒருங்கிணைப்புத் திட்டங்கள், வேலை தேடும்போது எதிர்கொள்ளும் பாகுபாடு ஆகியவை முக்கிய விவாதங்களாக இடம்பெறுகின்றன.

வேலைவாய்ப்பு வழிகாட்டல், நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் மத்திய அரசு, கன்டோன்கள், நகரசபைகள் இணைந்து மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்படுகிறது.

அகதிப் பெண்கள் தமது திறன்களைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான தடைகளை அகற்றி, சமமான வாய்ப்புகளை உருவாக்குவதே மாநாட்டின் மைய நோக்கமாகும்.

Thurgau: Altnauவில் கரவான் தீப்பற்றி எரிந்தது

பல பத்தாயிரம் பிராங்குகள் சேதம்!



Thurgau கன்டோனின் Altnau பகுதியில், நவம்பர் 16ஆம் திகதி திங்கட்கிழமை குடியிருப்பு இழுவை வண்டியொன்று தீப்பற்றி எரிந்துள்ளது. அருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் கரவானும் சேதமடைந்துள்ளது.

நண்பகல் 12.30 மணிக்குப் பின்னர், Landstrasse வீதியிலுள்ள வாகன நிறுத்துமிடத்தில் ஏற்பட்ட தீ குறித்து அவசர அழைப்பு நிலையத்திற்குத் தகவல் கிடைத்தது. விரைந்து சென்ற Altnau-Güttingen தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர்.

எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பொருட்சேதம் பல பத்தாயிரம் பிராங்குகளாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையான விசாரணைகளின்படி, தொழில்நுட்பக் கோளாறு தீ விபத்திற்குக் காரணமாக இருக்கலாம் என Thurgau கன்டோன் காவல்துறை சந்தேகிக்கிறது.



செம்மணி இடைக்கால அறிக்கை நிராகரிப்பு: நீதிகோரி யாழில் போராட்டம்

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளின்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்து, யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினரால் சர்வதேச நீதியை வலியுறுத்தி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - அரியாலை தபால்கட்டைச் சந்தியில் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடனும் சுயாதீனமான முறையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதி கிடைப்பதற்குச் சர்வதேச விசாரணைப் பொறிமுறையே அவசியம் என்றும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை தொடர்பில் தமது கடும் அதிருப்தியை வெளிப்படுத்திய போராட்டக்காரர்கள், அதனை முற்றாக நிராகரிப்பதாக அறிவித்தமையுடன், செம்மணி விவகாரத்தில் உண்மைகள் முழுமையாக வெளிக்கொணரப்பட்டுப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

சர்வதேச நீதிக்கான கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து தமது கவனயீர்ப்பை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



செம்மணிப் போராட்டக் களத்தில் ராஜ் சோமதேவவின் கொடும்பாவி எரிப்பு

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டதுடன், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் பிரதிக்கும் தீ வைக்கப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்தும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதி கிடைப்பதை உறுதிப்படுத்தச் சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியம் என்றும் வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினர் சர்வதேச நீதியை வலியுறுத்தி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் தமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை என்று தெரிவித்த போராட்டக்காரர்கள், அதனை முற்றாக நிராகரிக்கும் வகையில் அந்த அறிக்கையின் பிரதிக்கும், பேராசிரியர் ராஜ் சோமதேவவின் உருவப்பொம்மைக்கும் தீ வைத்துத் தமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.



பிரபாகரனின் வீட்டில் இருந்து மண்ணை எடுத்துச்சென்ற தொல்.திருமாவளவன்

சிரேஷ்ட அரசியல்வாதி எம்.கே. சிவாஜிலிங்கத்தின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவன், வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த பகுதியை நேற்று நேரில் பார்வையிட்டார்.

அத்துடன், அங்கிருந்த மண்ணையும் அவர் நினைவுச் சின்னமாக எடுத்துச் சென்றார்.

வல்வெட்டித்துறை - ஆலடிப் பகுதியில் அமைந்திருந்த தலைவர் பிரபாகரனின் இல்லம் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அந்தப் பகுதி வெறும் காணியாகவே காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில்தான் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினமான நவம்பர் 26ஆம் திகதி, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வருடாந்தம் கேக் வெட்டிப் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது வழக்கமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



பிரபாகரன் வாழ்ந்த இல்லக் காணியிலிருந்த பெயர்ப் பதாகை கிழிப்பு

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வாழ்ந்த காணியில் பதிக்கப்பட்டிருந்த பெயர்ப் பதாகை இரவோடு இரவாக விஷமிகளால் கிழித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அரசியல்வாதி எம்.கே. சிவாஜிலிங்கத்தின் புகழுடல் திங்கட்கிழமை மாலை தகனம் செய்யப்பட்ட நிலையிலேயே விஷமிகள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வல்வெட்டித்துறை - ஆலடி வீதியில் அமைந்துள்ள, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் சிறுவயதில் வாழ்ந்த வீடு இராணுவத்தால் உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்ட நிலையில், அந்தக் காணி முகப்பில் எஞ்சியிருக்கும் மதிலில் அவரது பழைய வீட்டுப் படத்துடன் கூடிய பெயர்ப்பதாகைகாட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பதாகை நேற்று திங்கட்கிழமை இரவோடு இரவாக விஷமிகளால் கிழித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் புகழுடல் நேற்று மாலை 4 மணியளவில் வல்வெட்டித்துறை - ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டிருந்த நிலையில், இந்தச்

சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளான நவம்பர் 26ஆம் திகதியன்று, அவர் வாழ்ந்த வீட்டுக்காணியில் எத்தனை அடக்குமுறைகள் வந்தாலும், சிவாஜிலிங்கம் தலைமையில் வருடா வருடம் கேக் வெட்டிப் பிறந்தநாள் நிகழ்வு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

இம்முறை தலைவரின் 72 ஆவது பிறந்தநாள் நெருங்கிவரும் நிலையில், சிவாஜிலிங்கமும் இல்லாத இடைவெளியில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் நோக்கில் இந்தச் செயல் அரச தரப்பினரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனத் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், சிவாஜிலிங்கத்தின் இறுதி நிகழ்வுக்காகத் தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்திருந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் நேற்று மாலை தலைவர் பிரபாகரனின் வீடு அமைந்திருந்த காணிக்குச் சென்று பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

PSTA மற்றும் OCB சட்டமூலங்களுக்கு தமிழரசுக் கட்சி கடும் எதிர்ப்பு

பயங்கரவாதத்திடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் சட்டமூலம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலம் ஆகியவற்றை நிறைவேற்றுவதைத் தடுத்து நிறுத்தக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், அதற்காக அனைவரும் இணைந்து எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எம்.ஏ. சுமந்திரன் இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒழிக்கப்படும் வேளையில் அதற்கு மாற்றாக ஒரு சட்டமல்ல, இரண்டு சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

இந்த இரண்டு சட்டங்களிலும் ஆபத்தான நிலைமை காணப்படுகிறது. இந்தச் சட்டங்கள் இரண்டையும் நிறைவேற்றிக் கொண்டால் அரசாங்கத்திற்கு எதிராக யாரும் வீதிக்கு இறங்க முடியாது.

அதனால் தற்போது நாம் கட்டியெழுப்பும் போராட்டத்தின் மூலமாகவே இதனைத் தடுத்து நிறுத்த முடியும்.

எமக்கு இருப்பது குறுகிய காலமே, நாம் நாடளாவிய ரீதியில் கடுமையான போராட்டங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இலங்கையில் FBI விசேட குழு: பின்னணி என்ன?



இணையவழி மோசடிகளை எதிர்கொள்ளவும், நாடுகடந்த குற்றக் கும்பல்களை முறியடிக்கவும் இலங்கை சட்ட அமுலாக்க அமைப்புகளுடனான ஒத்துழைப்பை அமெரிக்கா வலுப்படுத்தி வருகிறது.

இதற்கமைய இலங்கை அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பின் (FBI) சார்லோட் களப் பணியகத்தைச் சேர்ந்த குழுவினர், நவம்பர் 16 முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பில் பயணம் மேற்கொள்கின்றனர்.

இவர்கள், இலங்கையில் இயங்கும் மோசடி மையங்கள் குறித்து விசாரணை நடத்தி வரும் இலங்கை சட்ட அமுலாக்க அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுவார்கள் என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய விசாரணைகளுக்கு ஆதரவளிக்கவும், சிறப்புத் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கவும், அத்துடன் நாடுகடந்த மோசடி வலைப்பின்னல்களைக் கண்டறிந்து முறியடிப்பதற்கான அமெரிக்க மற்றும் சிறிலங்கா அதிகாரிகளின் திறனை வலுப்படுத்தவும் எவ்பிஐ ஒரு தனித்துவமான குழுவை அமைத்துள்ளது.

இந்த வருகையின் போது, எவ்பிஐ அதிகாரிகள், இலங்கை சட்ட அமுலாக்கப் பங்காளிகளுடன் இணைந்து புலனாய்வு நுட்பங்கள், டிஜிட்டல் தடயவியல் மற்றும் வழக்கு உருவாக்கம் போன்ற அம்சங்களில் பணியாற்றுவார்கள்.

இந்த ஒத்துழைப்பானது, பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியவும், குற்றச்செயல்களைக் கண்டறியவும், இணையவழி மோசடிகளுக்குக் காரண மானவர்களுக்கு எதிராக வலுவான வழக்குகளைக் கட்டமைக்கவும் புலனாய்வாளர்களுக்கு உதவும்.

மேலும், இலங்கையின் நிலப்பரப்பைப் பயன்படுத்தி நாடுகடந்த குற்றக் கும்பல்கள் இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் இலங்கையின் திறனையும் இது பலப்படுத்தும்.

"வெளிநாடுகளில் இயங்கும் குற்றக் கும்பல்கள் பல பில்லியன் டொலர்களைத் திருடி வருகின்றன; அவற்றை ஒழிப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்," என்று அமெரிக்கத் தூதுவர் எரிக் மேயர் தெரிவித்தார்.

"எவ்பிஐயின் புலனாய்வு நிபுணத்துவம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தை சிறிலங்கா சட்ட அமுலாக்க அமைப்புகளுடன் இணைப்பதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியவும், குற்றவாளிகளைத் தேடிப் பிடிக்கவும், மேலும் பல அமெரிக்கர்களும் இலங்கையர்களும் இத்தகைய மோசடிகளில் சிக்காமல் தடுக்கவும் முடியும்." என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வருகையானது, புலனாய்வுத் திறன்களை வலுப்படுத்தவும், மோசடி மையங்களின் செயல்பாடுகளை எதிர்கொள்ளவும் சிறிலங்கா அதிகாரிகளுடன் எவ்பிஐ மேற்கொள்ளவிருக்கும் நீண்டகால ஈடுபாட்டின் தொடக்கமாகும்.

இந்த முன்னெடுப்பிற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆதரவளிப்பதுடன், எவ்பிஐயுடன் இணைந்து ஒருங்கிணைந்து செயற்படுகிறது.


STEDO
சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு அமைப்பு
தொழில்முனைவோரின் சங்கமம்
தடம்
வணிகத் துறையில் புதிய தடம் பதிக்கும் நமது
தமிழ் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் சாதனையாளர்களை
ஒன்றிணைக்கும் ஒரு பிரம்மாண்டமான மாலைப் பொழுது!
தொழில் தொடர்பு
தொழில் அதிபர்களுடன் சந்திப்பு
புதிய தொழில் வாய்ப்புகள்
முன்னேற்றம்
புதிய யோசனைகள்
புதிய வாய்ப்புகள்
உடை
அழகான வணிக உடை
அழகான பாரம்பரிய உடை
இரவு உணவு
சிறப்பு உணவு
இனிய சந்திப்பு
Date
13.12.2026
(Sunday)
Time
14:30-18:00
18:00-21:00 Networking
Venue
STERNENSAAL
BÜMPLIZSTRASSE 119
3018 BERN
079 218 70 75 I 079 780 10 00 I 079 443 44 94
www.stedo.ch